Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும்
உங்கள் இல்லங்களிலிருந்து
உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTERNET
மூலம் தொடர்பு கொள்ள
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை
Sri Murugan
Tele Communication & Agency post Office
303, K.K.S.ROAD JAFFNA T.P.021 - 22 2670
FAX - 222 3214 email-del-srnskr @ evreka.lk
(சி.1136)

மலர் : 01 திருவளளுவர் ஆண்டு: 2034 ஆடி 26 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஐ.ஆகிர் 12 (11.08.2003) திங்கட்கிழமை இதழ்: 312



பேராளர் மாநாட்டில் கலந்துகொண்ட விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள்.

## பல்லாயிரம் பேராளர்கள் ஒன்றுகூடிய யாழ். தேசிய எழுச்சிப் பேரவை மாநாடு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் மாநாடு நேற்றுப் பளையில் இடம்பெற்றது.

இந்த மாநாட்டில் - தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் தளபதிகள், போராளிகளும் - வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம், யாழ். நல்லூர் கோட்டங்களைச் சேர்ந்த தேசிய எழுச்சிப் பேரவையின் உறுப்பினர்கள், மதகுருமார்கள், கல்வியாளர்கள் என, 3 ஆயிரத்து 500 இற்கு மேற்பட்டவர்களும் கலந்துகொண்டனர்.

நேற்று முற்பகல் 10.45 மணியளவில், பொதுச்சுடர் ஏற்றலுடன் எழுச்சிப் பேரவையின் மாநாடு ஆரம்பமானது. பொதுச்சுடரினை - லெப்.அன்பழகனின் தயார் தாட்சாயிணி, மேஜர் பகலவனின் தந்தையார் நாகராசா, யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஆகியோர் ஏற்றினார்.

தமிழீழ தேசியக் கொடியை - வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் ஏற்றினார்.

இந்த நிகழ்வில்வரவேற்புரையை - வேதவல்லி செல்வரத்தினம் நிகழ்த்தினர்.தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ்.மாவட்ட செயலாளர் சூ.சிறில் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. (10 ஆம் பக்கம் பார்க்க)

# அரசின் யோசனைகளுக்கு பதிலான திட்டம்; சர்வதேச நிபுணர்கள் மூலம் இறுதிவடிவம்!

### பளை பேராளர் மாநாட்டில் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு



(பளை)

**இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அரசாங்கம் முன்வைத்த யோசனைகளை, அடிப்படையாகக் கொண்டு, புலிகளின் தலைமைப்பீடம் தீர்வு ஆலோசனைகளைப பூர்த்திசெய்துள்ளது.**

**சர்வதேச சட்ட நிபுணர்கள், துறைசார் நிபுணர்களை ஒன்றிணைத்து, இதற்கு இறுதிவடிவம் கொடுக்கவிருக்கிறோம்.**

**இதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, சமாதான நடவடிக்கைகளுக்கு வருமாக இருந்தால், மீண்டும் பேச்சு நடத்தத் தயாராக இருக்கிறோமென, தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.**

நேற்று பளையில் நடைபெற்ற - யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய தமிழீழ அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், நாங்கள் ஏமாற்றப்படக்கூடியவர்கள் அல்ல. நாங்கள் நலமாக இருக்கின்றோம். மக்கள் எங்களோடு உள்ளார்கள், நாங்கள் மக்களோடு இருககின்றோம். நாங்கள் சமாதானக் கதவை மூடமாட்டோம். ஆனால், (10 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைப் பிரச்சினையில் இந்தியா நேரடித் தலையீடு?

அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான சமாதானப்பேச்சுக்களை மீண்டும் ஆரம்பித்துவைக்க, இந்தியா எடுக்கும் முயற்சியின் மூலம், இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவின் நேரடித் தலையீட்டிற்கான ஆரம்பநிலை உருவாகியுள்ளதாக, கொழும்பு அரசியல் வட்டாரத்தில் கருத்து நிலவுகிறது.

முன்னதாக - இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணானடஸ் இலங்கைக்கு விஜயம் செய்யவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், தற்போது அவரின் வருகைக்கு முன்பாக - இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஷ்வந் சின்ஹா வருகை தரவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவரின் இலங்கை வருகை (10 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயப் பிரச்சினைக்கு விரைவில் நல்ல தீர்வு கிடைக்கும்!

### யாழ்.வந்த அமைச்சர் ஜோன் அமரதுங்க

(யாழ்ப்பாணம்)

"கடந்தகால யுத்தத்தின்போது, இந்த ஆலயத்தில் நடைபெற்ற துயரச் சம்பவத்தையிட்டு நான் மனம் வருந்துகின்றேன்".

- இவ்வாறு நேற்றைய தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த உள்துறை அமைச்சர் ஜோன அமரதுங்க, புனித யாகப்பர் ஆலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில - சில வருடங்களுக்கு முன்னர், போர் (10 ஆம் பக்கம் பார்க்க)

### அரசின் இடைக்கால திட்டவரைபு குறித்து

## புலிகள் தரப்பு பாரிஸில் கூடி ஆராயும்; பாலசிங்கம் கலந்துகொள்ளமாட்டார்!

### நம்பகமான வட்டாரங்களிலிருந்து தகவல்

அரசாங்கம் முன்வைத்துள்ள வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாகம் தொடர்பான திட்டவரைபு குறித்து ஆராய்வதற்காக, அடுத்த வாரமளவில் - பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் நடைபெறவுள்ள கூட்டத்தில் - புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கலந்துகொள்ளமாட்டாரென, நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இந்தக் கூட்டம், அடுத்த வாரமளவில் பாரிஸில் நடைபெற ஏற்பாடாகியிருப்பதுடன், இதில் கலந்துகொள்வதற்காக - விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், எதிர்வரும் 16 ஆம் திகதியளவில் கிளிநொச்சியிலிருந்து புறப்பட்டுச் செல்லலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கூட்டத்தில், விடுதலைப் புலிகளின் சட்ட ஆலோசகர் கலாநிதி ருத்திரகுமாரன் மற்றும் அரசியல் விவகாரக்குழு உறுப்பினர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

முன்னர், இக்கூட்டம் ஜேர்மனியின் பேர்ளின் நகரில் இடம்பெறுவதாகத் திட்டமிடப்பட்டிருந்தபோதிலும், தற்போது பிரான்ஸுக்கு மாற்றப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக் குழுவிலிருந்து விலக அமைச்சர் மொறகொட முடிவு!

(கொழும்பு)

சமாதான பேச்சுவார்த்தைக் குழுவிலிருந்து தன்னை நீக்கிவிடுமாறு, விஞ்ஞான [illegible]ில்நுட்ப, பொருளாதார மீள்கட்டமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட [illegible]டுத்த கோரிக்கைக்கு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதுவரை அ[illegible]தி வழங்கவில்லையென, அரசாங்க வட்டாரங்களிலிருந்து தெரியவருகிற[illegible]

இடைக்கா[illegible]ிர்வாக சபை தொடர்பாக, விடுதலைப் புலிகள் ஆராய்ந்து, அரசாங்கத்தி[illegible] பதில் ஒன்றினை வழங்கிய பின்னர் - இது தொடர்பாகப் பேச்சுவார்த்[illegible] இடம்பெறுமென, எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தப் பேச்சுவார்த்தைக் [illegible]ழுவில், தான் பங்குபற்றுவதனை தவிர்த்துக்கொள்ள விரும்புவதாக, [illegible]மைச்சர் மிலிந்த மொறகொட பிரதமரிடம் கேட்டிருப்பதாகவும் தெரி[illegible]வருகின்றது.

### அமைச்சர் ஜோன் அமரதுங்கவை


## செயலகத்திற்குள் செல்லவிடாது பொதுமக்கள் நேற்று மறியல்!

யாழ்.குடாநாட்டில், காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் நடத்திய மறியற்போராட்டத்தையடுத்து, நேற்று - ஜோன் அமரதுங்க யாழ். செயலகத்தில் கலந்துகொள்ளவிருந்த நிகழ்வு இறுதிநேரத்தில் ரத்தானது.

நேற்று, யாழ்.வந்த உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆனந்தராஜா உட்பட பலர் மாலை 4 மணிக்கு, யாழ். செயலகத்தில் - அரச உயர் (10 ஆம் பக்கம் பார்க்க)



# கூரைத்தகடுகளுடன் வந்த லொறி நேற்று குடைசாய்ந்தது!



குருநகர் மக்களுக்கு வழங்குவதற்காக - இந்து கலாசார அமைச்சினால் கொண்டுவரப்பட்ட கூரைத்தகடுகளை ஏற்றிவந்த லொறி, கழிவு நீர் வாய்க்காலுக்குள் சரிந்தது.

இந்து கலாசார அமைச்சினால்- குருநகர்ப் பகுதியிலுள்ள மக்களுக்கு கூரைத்தகடுகள் மற்றும் சீமெந்துகள் வழங்கப்பட்டு வருகின்றது.

இதற்காக, கொழும்பிலிருந்து ஒருதொகை கூரைத்தகடுகளுடன் வந்த லொறியே, நேற்றையதினம் கழிவு நீர் வாய்க்காலுக்குள் குடைசாய்ந்தது.

## நிக்கொட் நிறுவனம்

# முல்லை. பாடசாலைகளுக்கு தளபாடங்கள் அன்பளிப்பு

(கிளிநொச்சி)

முல்லை. மாவட்டத்திலுள்ள பதினெட்டுப் பாடசாலைகளுக்கு, நிக்கொட் நிறுவனத்தால் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தத் தளபாடங்களில். 1097 மேசைகளும் 2130 கதிரைகளும் உள்ளடக்கும் என, நிகொட் முல்லை மாவட்டப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். அத்துடன், மேலும் 14 மில்லியன் ரூபா பெறுமதியான தளபாடங்கள் வழங்கப்படவுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (17)

## பிறந்தநாள் வாழ்த்து



கனடா ரொரன்ரோவில் வசிக்கும்
திரு. திருமதி பாஸ்கரன் தம்பதிகளின்
செல்வப் புத்திரி **தக்ஷனா**
தனது 3 ஆவது பிறந்தநாளை
11.08.2003 அன்று குதூகலமாகக்
கொண்டாடுகின்றார்.
இவரை அப்பா, அம்மா, அப்பம்மா,
அம்மப்பா குடும்பம், பெரியப்பா
குடும்பம், மாமாமார் குடும்பம், தம்பி
ஹிஷான், அக்காமார், மச்சாள்மார்,
அண்ணா யாதவன் ஆகியோர் அவரை
சீரும் சிறப்புடனும் வாழ, எல்லாம் வல்ல
முத்துமாரி அம்பிகையை வேண்டி
வாழ்த்துகிறார்கள்.

Happy Birthday!

தகவல்:
பெரியப்பா இரா.சோமசுந்தரம் G.S.
அல்வாய்.
(சி-1335)

## இரு தினங்கள் மட்டுமே வங்கிச்சேவை

(ஆழியவளை)

முல்லைத்தீவு இலங்கை வங்கிக் கிளை - செவ்வாய், வியாழன் ஆகிய இரு நாட்களில் மட்டுமே, செயற்படும் என வங்கியின் முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

வங்கி தொடர்பான செயற்பாடுகள் சரியான முறையில் முல்லை நகரப் பகுதிக்கு வரவில்லை எனவும், இதன காரணமாக முழுமையாக இயங்க முடியாதுள்ளதாகவும், வெகுவிரைவில இதற்கான ஒழுங்குகளை செய்ய முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த முதலாம் திகதி இவ்வங்கி முல்லை நகர்ப்பகுதியில் செயற்பட ஆரம்பித்துள்ளபோதும், தொடர்ந்து இயங்காததினால் வாடிக்கையாளர் பல அசௌகரியங்களை எதிர்கொளகின்றனர். (122)

## ஸ்ரீ பால கதிர்காம ஆடிவேல் பவனி

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ பால கதிர்காம தேவஸ்தானத்தின் ஆடிவேல் இரத பவனி - நாளை செவ்வாய்க்கிழமை காலை ஆரம்பமாகி பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். நகரை வலம்வருமென தேவஸ்தானத்தினர் அறிவித்துள்ளனர்.

ஆடிவேல் விழா சிறப்புற நடப்பதற்கு, யாழ். வர்த்தகர்கள் வீதியை மகர தோரணங்களால் அலங்கரித்து, பூரணகும்பம் வைத்து முருகனை தரிசிக்குமாறு - யாழ்ப்பாண வணிகர் கழகம் வர்த்தகர்களை கேட்டுக்கொண்டுள்ளது.

## சிறப்பு சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தினர் இன்று காலை 9.30 மணிக்கு சிறப்பு சொற்பொழிவு ஒன்றினை வழங்கவுள்ளனர்.

யாழ்.வேம்படி உயர்தரப் பாடசாலையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு "முகாமைத்துவமும் நிர்வாகத் துறையும்"என்ற தலைப்பில், யாழ். தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் இ.இராஜமகேந்திரசிங்கம் சிறப்புச் சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தவுள்ளார். திருமதி தேவரஞ்சினி சிவாஸ்கரனின் சொற்பொழிவும் இந்தநிகழ்வில் இடம்பெறவுள்ளது.

## வடகிழக்கு மாகாணத்தில் யாழ். அணி முதலாமிடம்!

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண அணிகள் பங்குபற்றிய கிரிக்கெட் போட்டியில், யாழ்.மாவட்டம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு மாவட்ட அணி 94 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அடுத்து துடுப்பெடுத்தாடிய யாழ். மாவட்ட அணி விக்கெட் இழப்பின்றி 96 ஓட்டங்களைப் பெற்றதோடு, வடக்கு - கிழக்கிலுள்ள சகல மாவட்டங்களையும் வென்று முதலாம் இடத்தைப் பெற்றுக்கொணடது.

இந்தப் போட்டி தம்புள்ளவில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.


# ஐந்து மாவட்டப் பாடசாலைகளில் இலவச மதிய உணவுத் திட்டம்

ஐந்து மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளில் - மீண்டும் இலவச மதிய போசனத் திட்டத்தை நடைமுறைப்படுத்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

வவுனியா, அம்பாறை, மொனராகல, இரத்தினபுரி, அம்பாந்தோட்டை ஆகிய ஐந்து மாவட்டங்களிலேயே தெரிவுசெய்ப்பட்ட பாடசாலைகளில் இந்த இலவச மதியஉணவுத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி பிறேமதாஸ முன்னர் பாடசாலை மாணவர்களுக்கு, இலவச மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்திய போதும், பின்னர் இத்திட்டம் கைவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## மரண அறிவித்தல்



### M.T.திருநாவுக்கரசு

**(பிரபல வர்த்தகரும், இராஜேந்திரா ஸ்ரோர்ஸ் முன்னாள்உரிமையாளரும், கலட்டி எச்சாட்டி மஹாமாரியம்மன் முன்னாள் பஞ்ஞகர்த்தா)**

201, பிறவுன் வீதி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட M.T. திருநாவுக்கரசு அவர்கள் 09.08.2003 சனிக்கிழமை இரவு 9.30 மணியளவில் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை தங்கச்சிபிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்ற சபாரத்தினம் அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், தனலட்சுமியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான M.T.சுப்பிரமணியம் (விமலாஸ்ரோர்ஸ், கண்டி), M.T.பொன்னம்பலம் (பிரபல வர்த்தகர்), மனோன்மணி, M.T.நடராசா, M.T.சோமசுந்தரம், (M.T.S.TRANSPORT JAFFNA - COLOMBO) மற்றும் பராசக்தி (ஓய்வுபெற்ற ஆசிரியை), M.T.தர்மலீங்கம் (ஓய்வுபெற்ற தபாலதிபர்), M.T.துரையப்பா (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், கச்சேரி) ஆகியோரின் அருமைச் சகோதரனும், இராஜேந்திரன் (உரிமையாளர், இராஜேந்திரா ஸ்ரோர்ஸ் - ஸ்ரீ ரங்கநாதன் றேடேர்ஸ், யாழ்ப்பாணம்), பாலேந்திரன் (கனடா), இந்திரஜோதி, ரவீந்திரன் (கனடா), சந்திரவதனி (கனடா), தவேந்திரன் (கனடா), சுகந்தமலர் (கனடா), வசந்தமலர் (கனடா), ஞானேந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுகந்தினி (கொக்குவில்), R.S.நடராசா (R.D.A.முல்லைத்தீவு - கிளிநொச்சி), சிவமலர் (கனடா), மகாலட்சுமி (கனடா), பத்மநாதன் (கனடா), சித்திரா (கனடா), கனகவரதன் (கனடா), சேயோன் (கனடா), டில்ருக்ஸி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், கோபிகன், றஜீவன், சஜித்தன், விதுசா, ஷாமிலா, மனோஜ், பிரசன்னா, பிரசோத், மயூரா, சாஹீரா, சஜன், ஹரிஜன், அஸ்மினா, கோல்ட்வின், அனிதா, டனிதா, ஆதித்தன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 11.03.2003 திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
T.இராஜேந்திரன் (மகன்)
(இராஜேந்திரா ஸ்ரோர்ஸ் - ஸ்ரீரங்கநாதன் றேடேர்ஸ், யாழ்ப்பாணம்)

*201, பிறவுன் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*T.P: 071-2355312* (451)


முற்றிலும் Japan தயாரிப்பான Sony, National T.Vக்கள் 14", 16", 19", 20", 21", 25", 26", 29", மற்றும் வீடியோ டெக், செற்றப் ரேடியோக்கள் அதற்கான உதிரிப்பாகங்களும், சிங்கப்பூரிலிருந்து தருவிக்கப்பட்டு மலிவான விலையில் விற்பனைக்குண்டு என்பதனை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். (1330)

நீங்கள் நாடவேண்டிய இடம்



**SHAN MULTI TRADE CENTRE**

150, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.





# மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

அநேக வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க இம்மாதம் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. உங்களுக்குத் தேவையான சகலவிதமான புத்தகங்களும், ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள "புத்தகக் கடல்" 10% - 50% கழிவு வழங்கப்படும். ஒரு சில மருத்துவ, பொறியியல், கணினி புத்தகங்கள், ஆங்கிலம் கற்றுக்கொள்ளப் பாடசாலை மாணவர்களுக்கான ஒரு சில புத்தகங்களும், உபகரணங்களும் ரூபா 10 - ரூபா 100 வரை பெற்றுக்கொள்ளலாம். இவை தவிர பாடசாலை அலுவலக உபகரணங்களும், பாடசாலை அழிபொருட்கள், மூலப்பொருட்களும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலைகளுக்கு இலவச விநியோகம். பணத்திற்கு பதிலாக வங்கிக்கடன் அட்டைகளும் பெற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் தேவை எதுவானாலும் பூர்த்திசெய்யத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**

இல.212, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/1306)

# அரசின் சமஷ்டி மூலமான தீர்வுக்கு 80 வீதமான சிங்களவர் எதிர்ப்பு!

சமஷ்டி அடிப்படையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் யோசனைக்குக்கூட, சிங்கள மக்களிடம் பெருமளவிலான ஆதரவு இல்லை என்பதை, அரசசார்பற்ற நிறுவனமான - 'சோஷல் இன்டிகேட்டர்' 17 மாவட்டங்களில் மேற்கொண்ட அபிப்பிராய வாக்கெடுப்பின்மூலம் தெரியவந்துள்ளது.

'தமிழர்களும், முஸ்லிம்களும், ம்லையகத் தமிழர்களும் சமஷ்டிக்கு ஆதரவாக இருக்கின்றனர்.

ஆனால் சமஷ்டி முறை குறித்த அபிப்பிராய வாக்கெடுப்பில் - 21. 9 சதவீதமான சிங்கள மக்கள் மட்டுமே ஆதரவு தெரிவித்துள்ளனர்.

தமிழ்மக்களில் 86. 5 சதவீதத்தினரும், முஸ்லிம்களில் 60.4 சதவீதத்தினரும், மலையக மக்களில் 79 சதவீதத்தினரும் சமஷ்டி ஆட்சி முறைக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

சமஷ்டி குறித்து - பேச்சுவார்த்தை நடத்த விடுதலைப் புலிகள் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளனர். தற்போது, இடைக்கால நிர்வாக சபை குறித்த பேச்சுவார்த்தைக்கும் அரசும் - புலிகளும் தயாராகிக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வேளையில், சமஷ்டி குறித்து தென்பகுதியில் சிங்கள மக்களிடம் இருந்து இத்தகைய அபாய சமிக்கை வெளிவந்ததுள்ளமை, தமிழ்மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# மாகாணசபை உறுப்பினர்களிடம் கருத்தறியும் முயற்சியில் சந்திரிகா



மாகாணசபைத் தேர்தல் மூலமாக, தனது அரசியற்பலத்தை நாடிபிடித்தறியும் நோக்கில் ஜனாதிபதி - மாகாணசபை உறுப்பினர்கள், அமைச்சர்கள் ஆகியோரிடம் தேர்தல் தொடர்பான அபிப்பிராயங்களைக் கோரத் தீர்மானித்துள்ளார்.

மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக - பொ.ஐ.முன்னணி மாகாணசபை உறுப்பினர்களின் அபிப்பிராயத்தை அறியும்முகமாக தனிப்பட்ட ரீதியில் ஒவ்வொருவருக்கும் கடிதங்களை அனுப்புமாறு, சிறிலங்கா சுதந்திரக்கட்சி பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி சந்திரிகா பணித்துள்ளார்.

எதிர்வரும் பதினைந்தாம் திகதிக்கு முன்னர் உறுப்பினர்களிடமிருந்து அபிப்பிராயங்களைப் பெற்றுக்கொள்ளுமாறும் ஜனாதிபதி - மைத்திரிபால சிறிசேனவிடம் கேட்டுள்ளார்.

# மினிபஸ் மோதியதால் வாகனங்கள் சேதம்!

மினிபஸ்ஸும் இலங்கை போக்குவரத்து சபை பஸ் ஒன்றும் கலைபட்டதில், மினிபஸ் வீதியின் அருகில் நின்ற வாகனங்களைச் சேதப்படுத்தியது. நேற்றுமுன்தினம் திருநெல்வேலிச் சந்தியிலேயே இச்சம்பவம் நடைபெற்றது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது, இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றைத் துரத்திப் பிடிக்கும் நோக்கோடு, மினிபஸ்ஸை ஓட்டி வந்த சாரதி- பெண்ணொருவர் வீதியைக் கடக்க முற்பட்டதால், தடுமாறி வீதியின் அருகில் நின்ற ஹைஏஸுடன் மோதினார்.

இதன்போது, ஹைஏஸ் வானின் பின்னால் நின்ற லாண்ட்மாஸ்ரர் ஒன்றும், சைக்கிளொன்றும் சேதமடைந்தன. இதன்போது, சாரதி மதுபோதையிலிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விபத்துக்குள்ளான மினிபஸ், லாண்ட்மாஸ்ரர், ஹைஏஸ் என்பன கோப்பாய் பொலிஸாரால் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டன.

### சிறுமியிடம் சங்கிலி அபகரிப்பு!

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர்- சிறுமி ஒருவரிடம் இடம் விசாரிப்பதுபோல் பாசாங்கு செய்து, அச் சிறுமியின் ஒரு பவுண் பெறுமதியான கைச்சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இராசாவின் தோட்டம் பகுதியில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில், அதேஇடத்திலுள்ள பிரியதர்சினி என்ற எட்டு வயதுச் சிறுமியிடமே திருடர்கள் தம் கைவரிசையைக் காட்டியுள்ளனர். (55)

# இரண்டு தசாப்த கால யுத்தத்தினால் 12 ஆயிரம் படையினர் அங்கவீனம்!

## அமைச்சர் புஞ்சிநிலமே தகவல்

(கொழும்பு)

நாட்டில் கடந்த இரண்டு தசாப்த காலமாக நீடித்த யுத்தத்தினால், முப்படையினர் மற்றும் பொலிஸார் 11 ஆயிரத்து 694 பேர் அங்கவீனமடைந்ததாக அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே தெரிவித்துள்ளார்.

இராணுவத்தில் 10 ஆயிரத்து 533 பேரும், பொலிஸாரில் 225 பேரும், விமானப்படையில் 754 பேரும் யுத்த நடவடிக்கையின்போது அங்கவீனமடைந்திருக்கின்றனர்.

இத்தகவலை அங்கவீனமுற்றோர் உரிமைகள் பாதுகாப்பு திருத்தச்சட்டமூலம் மீதான விவாதத்தில் பேசும்போதே, அமைச்சர் புஞ்சிநிலமே வெளியிட்டார்.

அவர் அங்கு பேசும்போது, அங்கவீனமுற்றோர் சொந்தமாக ஒரு காணியைக்கூடக் கொண்டிருக்கவில்லையென்றும் தெரிவித்தார்.

## வவுனியாவில்

# கிரனைட் தாக்குதல் நடத்தி வீட்டிலிருந்து கொள்ளை!

வவுனியாவில் நேற்றுமுன்தினம் வீடொன்றில் புகுந்த கொள்ளையர்கள்- பல இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

வவுனியா - பண்டாரிக்குளம் மாடசாமி கோவிலடியைச் சேர்ந்த கணேஷ் என்பவரின் வீட்டிலேயே இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது - வீட்டிலிருந்த குடும்பத்தினரைக் கடுமையாகத் தாக்கியுள்ளதுடன், கிரனைட் தாக்குதலையும் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

படுகாயமடைந்தவர்கள் - வவுனியா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# அரச நிறுவனங்களைக் காப்பாற்ற ஆட்சி மாற்றம் ஏற்படுத்தவேண்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ



ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் ஆட்சிபீடமேறியது முதல் - இன்றுவரை பல அரச நிறுவனங்களைத் தனியார்மயப்படுத்தி வருகின்றது. இந்த நடவடிக்கையைத் தடுத்து நிறுத்துவதற்கு ஒரேவழி - விரைவில் புதிய ஆட்சியை அமைக்கவேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். ரயில்வே திணைக்களத்தை, அதிகாரசபையாக மாற்றியமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து - கொழும்பு - கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது உரையாற்றுகையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது, அரச நிறுவனங்களைத் தனியார்மயப்படுத்திவரும் இந்த அரசாங்கத்திடமிருந்து, எஞ்சிய நிறுவனங்களையாவது பாதுகாக்க வேண்டுமானால், விரைவில் ஆட்சிமாற்றம் ஏற்படுத்தப்படவேண்டும்.

நாட்டிலுள்ள இயற்கை வளங்கள் தனியார்துறையினரிடம் விற்கப்பட்டுள்ளன.

மீதமாகவிருக்கும் கூட்டுத்தாபனங்களையும் விற்பதற்குத் திட்டமிடப்படுகிறது. அதற்கு முன்னர் நாம் அவற்றைக் காப்பாற்றியாகவேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# கண்ணிவெடி அகற்றும் நிபுணர் வன்னியில் கார் விபத்தில் காயம்

வன்னிப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள சர்வதேச நிறுவனமொன்றைச் சேர்ந்த வெளிநாட்டவர் ஒருவர்- கார் விபத்தில் படுகாயமடைந்தார்.

கடந்த வியாழக்கிழமை பரந்தன்- முல்லைத்தீவு வீதியில் இந்த விபத்து இடம்பெற்றது. டானியல் றொனால்ட் என்ற இந்த கண்ணிவெடி அகற்றும் நிபுணர் பயணம் செய்த கார், பாலம் ஒன்றின் அருகே வீதியை விட்டு விலகி, வாய்க்கால் ஒன்றினுள் விழுந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் படுகாயமடைந்த றொனால்ட சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து விமானம் மூலம் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

## பிரமுக வங்கி விவகாரம்

# மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிரான மனுவை மத்திய வங்கி வாபஸ்

(கொழும்பு)

பிரமுக வங்கி மீதான மத்திய வங்கியின் தடையுத்தரவை ரத்துச் செய்து, மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை, மத்திய வங்கி வாபஸ் பெற்றுள்ளது.

மத்திய வங்கியின் உத்தரவை ரத்துச் செய்து, மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்ததையடுத்து, உயர்நீதிமன்றத்தில் மத்திய வங்கியின் சார்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனுவையே மத்திய வங்கி வாபஸ் பெற முடிவு செய்துள்ளதுடன், மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பை ஏற்றுக்கொள்வதாகவும் உயர்நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

நிதி மோசடி இடம்பெற்றதாகக் குற்றஞ்சாட்டி, பிரமுக வங்கி செயற்பட - மத்திய வங்கி தடைவிதித்திருந்ததும், பின்பு இத்தடையை மேன்முறையீட்டு நீதிமன்றம் ரத்துச் செய்ததும் குறிப்பிடத்தக்கது.

# அரசுக்கு எதிராக ஜே.வி.பியினர் நாளை கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு நகருக்குள் அரசாங்கத்திற்கெதிரான எதிர்ப்பு ஆர்பாட்டமொன்றை - ஜே.வி.பியினர் நாளை நடத்தவுள்ளனர்.

வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாக சபையை வழங்கி, தமிழீழத்தைப் பெற்றுக்கொடுக்கவும், அப்பிரதேசங்களில் வெளிநாட்டுப் படைகளை வரவழைத்து நிலைநிறுத்தவும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் மேற்கொண்டுவரும் திட்டங்களை எதிர்த்தே, இந்த முழுநாள் ஆர்பாட்டம் கொழும்பில் நடத்தப்படவுள்ளதாக, ஜே.வி.பி. தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னோடியாக 'பத்து நாள் வேலைத் திட்டம்' என்ற பெயரில் நாட்டின் சகல பகுதிகளிலும், நேற்றுச் சனிக்கிழமை முதல் வீடு வீடாகச் சென்று, அரசாங்கத்தின் திட்டங்களுக்கு எதிராக பிரசார நடவடிக்கைகளை ஜே.வி.பி. ஆரம்பித்துள்ளது.

## மத்திய அரசின் வசமுள்ள

# மாகாணசபையின் அதிகாரங்களை அதிகாரசபையிடம் பகிர நடவடிக்கை

பதின்மூன்றாவது அரசியலமைப்பு திருத்தத்தின் கீழ் - மாகாணசபைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படாத மத்திய அரசின் வசமுள்ள அதிகாரங்களை, அதிகாரசபைகளிடம் கையளிக்கும் பூர்வாங்க நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் இடைக்கால நிர்வாக சபை தொடர்பான வரைபை- தமிழீழ விடுதலைப் புலிகளிடம் கையளித்து, மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க ஒருபுறம் நடவடிக்கையை எடுத்தாலும், இந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகிறது.

இதன்போது - நீர்வள அதிகாரசபையை நிறுவி, மத்திய நீர்ப்பாசனத் திணைக்களத்தை அதிகாரசபையாக இணைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்கீழ் - இலங்கை மின்சாரசபை, மகாவலி அதிகாரசபை, சூழல் பாதுகாப்புச்சபை, நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை என்பன அதன் கீழ்க் கொண்டுவரப்படவுள்ளன.

# மேல்மாகாண முதலமைச்சர் நியமனத்தை ரத்துச் செய்யக்கோரி வழக்குத்தாக்கல்!

மேல்மாகாண முதலமைச்சர் ரெஜினோல்ட் குரேயின் பதவி நியமனத்தினை ரத்துச் செய்யக்கோரி- மேல்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1999 ஆம் ஆண்டு நடைபெற்ற மேல்மாகாணசபைத் தேர்தலில் பொ.ஐ.முன்னணி சார்பாகப் பத்துப் பேர் தெரிவானதாகவும், இதில் ரெஜினோல்ட் குரே இடம்பெறவில்லையெனவும் தெரிவித்துள்ள அந்த மனுவில்,

மாகாணசபை உறுப்பினர் தலைவரின் வெற்றிடத்துக்கு இவர் நியமிக்கப்பட்டதாகவும், இது உயர் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு விரோதமானது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வேட்பு மனுத்தாக்கல் செய்யாத ஒருவரை - உறுப்பினராக நியமித்தது சட்டவிரோதமானது என்றும், இதனால் ரெஜினோல்ட் குரேயின் நியமனத்தை ரத்துச்செய்ய உத்தரவிட வேண்டுமென்றும் இந்த மனுவில் கூறப்பட்டிருக்கிறது.

# ஒரு இனத்தின் பாதுகாப்புக்கு மொழித்தூய்மை அவசியம்!

## கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன்

எமது மொழி, எமது இனம் - தனது அடையாளத்தை எதிர்காலத்தில் இழந்துவிடாமல் இருக்க வேண்டும். இதற்கு எமது மொழியில் கலக்கின்ற, ஊடுருவுகின்ற பிறமொழித் தாக்கங்களிலிருந்து எம்மைப் பாதுகாக்கவேண்டும். இந்த நோக்கோடுதான், மண்ணைக் காப்பதற்காக நாம் ஒரு போராட்டத்தை நடாத்தி வருகின்றோம். இவ்வாறு தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற தமிழ்ப்பெயர் கையேடு நூல் வெளியீட்டு விழாவில் - வெளியீட்டுரை நிகழ்த்தியபோதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது - இன்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தவர்கள் - மிகச்சிறப்பாக உலகில் அந்தக் காலத்தில் இருந்த அரசுகளுடன் ஈடுகொடுக்க வேண்டிய அளவுக்கு, மிகப்பெரும் அரசுகளை வழிநடத்தியவர்களாக, சிறந்த மொழிக்குச் சொந்தக்காரர்களாக, சிறந்த பண்பாட்டுப் பெருமையுடையவர்களாக அன்று இருந்தார்கள். அவர்கள் தம்மைப் பெருமைப்படுத்தக்கூடிய வகையில், தங்களது பெயர்களை தமது - இனத்தைச் சுட்டக்கூடிய அளவிலே சிறப்பாக வைத்திருந்தனர். அது பொதுமக்களிலிருந்து- அப்போது ஆட்சி நடத்திய மன்னர்கள்வரை இருந்தது.

ஆனால், பிற்காலத்தில் பொற்காலம் என்று கூறக்கூடிய ஆட்சியை நடாத்திய தமிழர்கள்கூட, தமது பெயர்களைப் பிறமொழிகளில் மாற்றிக்கொண்டு, அதனால் பெருமைப்பட்டுக் கொள்கின்ற இழிநிலை இருந்தது.

ஒரு மொழியியல் வரலாற்றை எடுத்துப்பார்த்தால் - எந்த மொழியும் மொழிச் சிதைவும், மொழியினுள் பிற மொழிகள் ஊடுருவியதால், கிளை மொழிகள் உருவான வரலாறுகளாகவே உள்ளன. ஆகவே, மொழித் தூய்மை பேணுதல் என்பது அந்த இனத்தின் காப்புக்கு முதன்மையானது என்பதை நாம் அறிந்துகொள்ள முடியும்.

2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்த தமிழகம், இன்று இல்லை. தமிழ் மண் இன்றில்லை, பெரும்பாலான மண் - பிற மொழிக்கு உறுதியாக மாறிவிட்டது. தமிழ்மொழி பேசுபவர்களின் தொகையும் அன்றிருந்த தொகையைவிட கால்பங்காகக் குறைந்துள்ளது. தமிழக வரலாற்றை எடுத்துப் பார்த்தால் - 2000 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழராக இருந்தவர்கள், இமயம்வரை படையெடுத்து கனக விஜயர் தலைமையிலே கல்லையெடுத்து, கண்ணகிக்குக் கோயில் கட்டினான் சேரன் செங்குட்டுவன் என்று பெருமைப்பட்டோம்.

அந்தச் சேரன் பரம்பரையினர் இன்று மலையாளியாக மாறிவிட்டார்கள். 2000 ஆண்டுகளுக்கு முன்னர் - தமிழராக இருந்து, மலையாளிகளாக மாறியவர்கள் இன்று தமிழரை எதிர்க்கின்றநிலை உருவாகி வருகின்றது.

ஆகவே, எதிர்காலத்தில் எமது மொழி, எமது இனம் தனது அடையாளத்தை இழந்துவிடாமல் இருக்க வேண்டுமேயானால், நாங்கள் - எமது மொழியில் கலக்கின்ற, ஊடுருவுகின்ற பிற மொழித்தாக்கங்களில் இருந்து எம்மைப் பாதுகாக்க வேண்டும். அந்த நோக்கோடுதான் மண்ணைக் காப்பாற்றுவதற்காக நாம் ஒரு போராட்டத்தை நடாத்தி வருகின்றோம்.

உலகிலேயே எமது மொழியினர்தான் - எமது மொழியை பேசுவதறகு அகர முதலியைத் தேடுகின்ற ஒரு இழிநிலை ஏற்பட்டுள்ளது.

இன்று நாம் பேசுவது தமிழ் என்று நினைத்துக்கொண்டு - பிற மொழிகளைப்பேசுகின்ற ஒரு தன்மை இருந்து கொண்டிருக்கின்றது. அவற்றை எல்லாம் நீக்கவேண்டும் என்பதற்காக, நாம் பேச்சு வழக்கில் பயன்படுத்துகின்ற பிறமொழிச் சொற்களை இனங்கண்டு, அவற்றுக்கு இணையான தமிழ்ச் சொற்களை உருவாக்கி, நடைமுறைப்படுத்த தமிழ் வழிகாட்டி என்கின்ற ஒரு நூலை எமது தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்டது.

நாங்கள் எமது பெயர்களைத் தமிழில் வைக்கவேண்டும் என்ற கட்டாயத்தை எம்மவர்களுக்கு உணர்த்துகின்ற வகையிலேயே இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

இன்று எமது நிலத்தின் பெரும்பகுதி மாற்றாரால் கவரப்பட்ட நிலையில், தமிழ்ப்பகுதிகளின் பெயர்கள்- சிங்களத்தில் மாற்றப்பட்டுள்ளது என்பதை நினைத்து நாம் மிகவும் வேதனைப்படுகின்றோம். அதேபோல், அரசு எமது மாணவர்களின் தொண்டைக்குள் புதிய மொழியைத் திணித்து, புரியாத சொற்களைத் திணித்து, மாணவர்களின் நினைவில் நிற்காத பல சொற்களைப் பாடநூல்களில் புகுத்துகின்றது.

அதுமட்டுமல்ல, தமிழ்ப் பெயர்களாகவிருந்த பல நிறுவனப் பெயர்கள் - இன்று சிங்களப் பெயர்களாக மாற்றப்பட்டு வருகின்றன.

இத்தகைய செயல்களை சிங்கள அரசும், எதிரிகளும் எம்மீது - திணிக்கின்றன. இவற்றை நாம் வெல்லவேண்டும். ஆனால், நாமே எம்மை அடையாளப்படுத்துகின்ற பெயர்களைத் தமிழ்மொழியில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இன்றும் யாழ்ப்பாணத்தில் பல பெயர்கள் சர்ச்சைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. கடந்த காலத்தில் தமிழ் பெயர்கள் என எண்ணி, சிங்களப் பெயர்களைச் சில ஊர்களுக்குச் சூட்டியதனால், யாழ்ப்பாணத்தில் சில ஊர்களை சிங்கள ஊர்கள், சிங்களவர் வாழ்ந்த இடங்கள் என அரசு கூறுகின்ற நிலைக்குத் தள்ளி இருக்கின்றது

எனவே, மக்களுக்கு வைக்கப்படுகன்ற பெயர்கள் மட்டுமல்ல, ஊர்ப் பெயர்கள், இடப்பெயர்கள், தொழில் நிறுவனங்களின் பெயர்கள் என்பவற்றைக்கூட நாம், தமிழ்மொழியில் ஆககிப் பயன்படுத்துகின்ற ஒருநிலை வரவேண்டும்.

அந்த வகையில், மக்களுக்கு இருக்கின்ற பெயர்களை வழிகாட்டக்கூடிய இந்த தமிழ்ப் பெயர்க் கையேடு நூல் துணைநிற்கின்றது.

நாம் இந்த நூலை வெளியிடுவதன் நோக்கம் - எமது இன அடையாளத்தை, இனத்தின் பெருமையை தொடர்ந்தும் நிலைநிறுத்துவதற்கும், எதிர்காலத்தவர்களுக்கு உணர்ததுவதற்கும் ஏற்றநிலையில் தான் அமைகின்றது.

எமது தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் செயற்பாடுகள் எவரும் தமிழ், எதிலும் தமிழ் என்றும், தமிழர் என்கின்ற வகையிலே அமையும் என்பதோடு, எமது விடுதலைப் போராட்டத்துக்குத் தருகின்ற ஆதரவு போனறு, எமது மொழியாக்கத்துக்காக உங்களது முழுமையான ஒத்துழைப்பையும் வழங்கவேண்டும் எனறும் அவர் அங்கு கேட்டுக்கொண்டார். (122)

# மனித பாவனைக்கு உதவாத கறியுப்பு கடைகளில் விற்பனை!

(யாழ்ப்பாணம்)

மனிதப் பாவனைக்கு ஊறு விளைவிக்கக்கூடிய, குன்றுகளிலும், குழிகளிலும் உற்பத்தியாகும் உப்பு- தற்போது குடாநாட்டின் பல இடங்களிலும் விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தமிழீழ சுகாதார சேவையினர் அறிவித்துள்ளனர்.

இக்கறியுப்பு உரியமுறையில் பதனிடப்படுவதில்லை. இதனால், மனிதனுக்கு அத்தியாவசியமான அயடீன் சேர்க்கப்படாமையுடன், ஏனைய அளவுக்கு அதிகமான மனித உடல்நலத்திற்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய மூலக்கூறுகள் அகற்றப்படுவதற்குக் கறியுப்பு களஞ்சியப்படுத்தப்படுவதும் இல்லை.

எனவே, உப்பு உற்பத்தி நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும் உபபுத் தவிர்ந்த - ஏனைய குன்றுகள், குழிகளில் எடுக்கப்படும் பதனிடப்படாத உப்பை உணவுத் தேவைக்குப் பாவிப்பதைக் தவிர்க்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# போராளி மருத்துவக் குழுவினரால் பல இடங்களில் மருத்துவ சேவை

(யாழ்ப்பாணம்)

தியாகதீபம் தீலிபன் மருத்துவ சேவை போராளி மருத்துவர்களாலும், வெளிநாட்டிலிருந்து வருகைதந்த பல், இதய வைத்திய நிபுணர்களாலும், கடந்த மாதம் 7 ஆம் திகதி ஐயன்குளத்தில் 25 பேருக்குப் பற்சிகிச்சையும், 8 ஆம் திகதி அளம்பிலில் 86 பேருக்குப் பற்சிகிச்சையும், 9 ஆம் திகதி ஆழியவளையில் 249 பேருக்குப் பற்சிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன், இதய வைத்திய சிகிசசைக்கு மேலதிகமாகச் சிகிச்சை பெறாது இருந்த நோயாளர்கள் பலர் இனங்காணப்பட்டு, விசேட இதய வைத்திய சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதுடன், பொது வைத்திய சிகிச்சைகள், பல்வைத்திய சிகிச்சைகள், வைத்திய ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன.

தொடர்ந்து கிராமரீதியாக இப்படியான மருத்துவ சிகிச்சைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.



நெல்லியடியில் 35 இலட்சம் செலவில் நிர்மாணிக்கப்பட்ட மீன் சந்தை திறப்பு விழாவில் - கிராமசேவக உத்தியோகத்தர் எஸ். குணராசா உரையாற்றுவதையும், கரவெட்டி தெற்கு, மேற்கு பிரதேச சபை செயலாளர் சி. பசுபதி மற்றும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வி.ரி.கிருஷ்ணசாமி ஆகியோரையும் படத்தில் காணலாம். (17)

# சாவகச்சேரி - கச்சாய் வீதியில் மதுபோதையில் செல்வோர் சேட்டை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி - கச்சாய் வீதியூடாக மாலை நேரங்களில் மது போதையில் செல்வோரால் அப்பகுதி மக்களும், பயணிகளும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தினமும் மாலை நேரங்களில் மதுபோதையில் செல்வோர் தகாத வார்த்தைகளால் ஏசியும், பாதசாரிகளுடன் சேஷ்டை விடுவதிலும் இவர்கள் ஈடுபட்டு வருவது, இப்பகுதியில் மாலை நேரத்தில் அச்சத்தன்மையினை ஏற்படுத்தியுள்ளது.

இப்பாதையூடாகக் கச்சாய், அல்லாரைப் பகுதிக் கல்வி நிறுவன மாணவர்கள் போக்குவரத்தினை மேற்கொண்டுவருவது குறிப்பிடத்தக்கது.

இதனால், இப்பகுதியூடானப் போக்குவரத்தினை மாணவ, மாணவிகள் மாலை நேரங்களில் தவிர்த்து, வேறுபாதை ஊடாகவே தமது போக்குவரத்தினை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும் பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

# விளையாட்டுக்குழு தெரிவு

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் - பிரதேச செயலர் தலைமையில் பிரதேச விளையாட்டு ஒருங்கிணைப்புக்குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தலைவராக கே.ஜோன்சிங்கமும், செயலாளராக கே.வீரசிங்கமும், பொருளாளராக கே.திருநாவுக்கரசும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்தத் தெரிவுக் கூட்டத்துக்கு சண்டிலிப்பாய் பிரதேசத்துக்கு உட்பட்ட 18 கழகங்கள் பங்குபற்றின.

# யாழ். வலய ஆங்கில தினப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். வல்ய மட்ட ஆங்கிலதின குழு நிகழ்ச்சிகள் இன்றும், நாளையும் யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக, யாழ். வலய ஆங்கில உதவிக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (58)

# கட்டாக்காலிகளை விற்கும் கமநல சேவையின் முடிவால் பொதுமக்கள் மத்தியில் விசனம்

தனங்கிளப்பு, மறவன்புலோ பகுதிகளில் காலபோக நெற் செய்கைக்காகப் படையினரால் அனுமதிக்கப்பட்ட இடங்களில் காணப்படும் உரிமைகோர முடியாத கட்டாக்காலி மாடுகளை, ஏலத்தில் விற்பதென கைதடி கமநல சேவையினர் எடுத்த தீர்மானம் தொடர்பாகப் பொதுமக்கள் விசனமடைந்துள்ளனர்.

காலபோக நெற்செய்கைக்கு வசதியாக, இக்கட்டாக்காலி மாடுகளை பிடித்து, ஆதாரம் உள்ள மாடுகளை உரியவரிடமும், மிகுதி மாடுகளை ஏலத்திலும் விற்பதெனக் கமநல சேவைநிலையத்தில் நடத்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆனால், மாடுகள் இனங்காண முடியாத அளவிற்கு மாற்றடைந்திருக்கும் என்பதால், மாடுகளை இழந்த மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

இப்பகுதியில் சுமார் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்களுக்குச் சொந்தமான மாடுகள் காணப்படுகின்றன. (25)

# உயர்தர வகுப்பு ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புகள்

2005 ஆம் ஆண்டுமுதல் க.பொ.த. உயர்தர வகுப்புக்களுக்கு அறிமுகப்படுத்தப்படவிருக்கும் கணிப்பீட்டுத் திட்டத்தினை அணுகுவது தொடர்பான பயிற்சி வகுப்புக்கள் - இன்றும், நாளையும் யாழ்ப்பாணக் கல்விவலய அலுவலக மண்டபங்களில் பாடரீதியாக நடைபெறவுள்ளது.

தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இப்பயிற்சி வகுப்புக்களில், சகல பாடசாலைகளிலும் உயர்தர வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.



# எனது ஊரிலும்தான்

## நாவல்

சி. கதிர்காமநாதன்

'இங்க வந்தப்புறம் உங்களுக்கு 'சேப்ரி'தானே? ' முதலாளி மகன் சாமர்த்தியமாக, முதலாளித்துவமாக பதிலளித்தார்.

நான் ஒன்றும் பேசவில்லை.

"சரவணபவன் ஹோட்டலுக்குச் சென்று சாப்பிட்டுவிட்டு வந்தோம்."

'இப்படிச் சாப்பாடு அங்க கிடைக்குமோ? ' முதலாளியின் மகன் கேட்டார்.

உண்மைதான்.

அடுத்த சில நாட்கள் செட்டியாரின் காரிலே, 'எக்மோரில்' அமைந்துள்ள பஸ் கொம்பனிக்கு அடிக்கடி போய் வந்தோம். சில தெருக்கள் எனக்கு நன்கு பரிச்சயமாகத் தொடங்கின.

ஒருநாள் இப்படிக் காரிலே போகும்போது, முதலாளியின் மகன் சொன்னார்.

"செட்டியார்! இவர் இங்கதான் இருக்கப்போறார். இவரிடம் பஸ் கணக்குகளைக் கொடுத்துவிடுங்கோ."

செட்டியாரும் தலையாட்டினார்.

செட்டியார் இல்லாதபோது, இதையும் இடையிலே சொல்லுவதுண்டு. "செட்டியார் சுத்துவதிலே வலுவிண்ணன். கொஞ்சம் ஓடியாடித்தான் கணக்கு வாங்கவேணும்."

இடையிலே ஓரிரண்டு படங்கள் பார்த்தோம்.

வாழ்க்கை இப்படி இருக்கும்போது, எந்தப் பிரச்சினையும் ஏற்படாது.

காலையிலே புறப்பட்டுப்போனால், என்ன ஆனார்களோ என்று மற்றவர்கள் கவலைப்படவேண்டியதில்லை.

"பிடிச்சுக்கொண்டு போறாங்கள்."

"வழியில சுட்டுப்போட்டாங்கள்."

"குண்டுபோட்டு நாலுபேர் சரி. வீடு தரைமட்டம்"

"ஆமி வெளிக்கிட்டாங்கள். சண்டை நடக்குது. பெடியள் கண்ணிவெடி வைச்சிட்டாங்களாம்."

"ஹெலியில இருந்து சுடுகிறாங்கள்."

இவ்வாறான செய்திகள் ஒவ்வொரு நாளும் பரவும் அவல வாழ்க்கையில்லை. எங்களின் நிம்மதிக்காக ஓடி வருவதற்கென்று, ஒரு நாடு பக்கத்தில் இருப்பதேபோதும்.

முதலாளி மகன் ஊருக்குப் போய்விட்டார். அவருக்கு வந்தவேலை முடிந்துவிட்டது. நான் அடிக்கடி எக்மோர் போவதனால், மாம்பலம் புகையிரத நிலையத்திலிருந்து மின்சார வண்டியில்தான் பயணம்.

செட்டியாரின் பஸ் கணக்குகளை வாங்கமுடிந்தது.

காலையில் நாகர்கோயிலிலிருந்து பஸ் வந்துவிடும். அன்றாடம் நடக்கும் திருத்தவேலைகள் முடிந்து கழுவித்துடைத்து, பின்னேரம் 3 மணிக்குமேல எங்கள் அலுவலகத்தின் முன் நிறுத்தவேண்டும். சனங்கள் வந்து பஸ் நிரம்பியதும், நாலு மணிக்குக் கிளம்பிப்போய்விடும். அதனோடு அன்றைய வேலையும் முடிந்துவிடும்.

★ ★ ★ ★

பின்னேரங்களில் - வாசலில் நின்ற நாகலிங்க மரத்தினடியில் போயிருப்பது வழக்கமாகிவிட்டது. எங்கள் இடத்திலே குடியிருப்பவர்கள் என்னைப் பார்த்தும் பாராததுபோல சென்றுவிடுவர். யாரும் நெருங்கிப் பழக முன்வரவில்லை. என்ன காரணம்?

முதல்ாளி மகன் இருந்தபோது, ஒரு இடமும் சுற்றிப்பார்க்க முடியவில்லை. நான் குடியிருக்கும் இடத்தின் முன்னே நீண்டுபோகும் தெரு எங்கே போகிறது? அதுகூட இன்னமும் தெரியாது.

இரவு 10 மணிக்கு மேலேதான் வெளிச்சத்தம் நின்றது. ஒரே நிசப்தம். குழாயில தண்ணீர் அடித்துக்கொண்டிருந்தவர், வேலை முடித்ததும் என்னிடம் வந்தார். "பேசறதுக்கு ஒருத்தரும் இல்லைப்போல" என்றார்.

நான் மெல்லச் சிரித்தேன்.

இவர் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். பெயர் ஸ்ரீராம். டெல்லியில வேலை பார்க்கிறாராம். அவரது பேச்சு வித்தியாசமாகத் தெரிந்தது. எங்கள் நிலையை நன்கு தெரிந்தவர்போலத் தென்பட்டார்.

"நாளைக்கு உங்களுக்கு வேலை இல்லாவிட்டால், என்னோட வரமுடியுமா?"

"எங்க போகணும்?"

"வானதி பதிப்பகத்திற்கு. என்னோட அண்ணை சொல்லி விட்டவர். கொஞ்சப் புத்தகங்கள் வாங்கவேணும்."

"போகலாம். நான் அழைச்சிட்டுப் போறன்."

'எனக்குப் பல இடங்களுக்குப் போகப் பாதை தெரியாது. அதையும் காட்டித்தாங்கோ'. அவர் உடனே என்னை அறைக்கு அழைத்துக்கொண்டு வந்து - வெள்ளைத் தாளிலே இடங்களையும், செல்லும் பாதைகளையும் வரைந்து காட்டினார்.

மாம்பலம் பஸ் ஸ்ராண்ட், பஸ் இலக்கங்கள், பாண்டி பஜார், மவுண்ட்ரோட் தியேட்டர்கள்.

"இப்ப இவ்வளவும்போதும். நீங்க இங்கதானே தங்கப் போறீங்க. மெல்ல மெல்ல கத்துக்குவீங்க."

அவர் சொன்ன மாதிரியே இடங்கள் கொஞ்சமாகப் புரியத் தொடங்கின.

மற்ற இருப்பிடங்களில் உள்ளவர்கள் புன்னகையிலே தொடங்கி, என்னுடன் பேசத் தொடங்கினார்கள். எல்லோரும் பொதுவாக ஒன்றையே கூறினார்கள்.

"சிலோனில இப்பவும் பிரச்சினை தீர்ந்தபாடில்லை."

இரவில் நாகலிங்க மரத்தடியில் நானும், ஸ்ரீராமும் கதைத்துக்கொண்டு இருந்தோம். நான் இங்கு வந்தநோக்கம், எனது குடும்பம், ஊர்ப்பிரச்சினை அனைத்தையும் அறிந்துகொள்வதற்கு, எல்லாவற்றையும் சொல்லிக் கொண்டு போகும்போது, மனதிலே பெரிய பாரம் குறைந்த மாதிரியிருந்தது.

"ஏன் ஸ்ரீராம். கனபேருக்கு எங்களைப் பற்றிச் சரியாக விளங்கேல்லை? எங்கட இனப்பிரச்சினை பற்றி பல பேருக்கு ஒண்டுமே தெரியாது. ஏதோ சண்டை பிடிக்கினமாம். சனம் அகதிகளாக இங்கவருகுது. உங்களால எவ்வளவு காசு செலவெண்டு கதைக்கினம்."

ஸ்ரீராமுக்குச் சிரிப்பு வந்தது.

"உங்களுக்கு எங்கட சஞ்சிகைகள் வந்துசேருது. இதனால, நீங்க இந்தியாவில இருக்கிறவங்களோட நிலையைப்பற்றி அறிஞ்சிருக்கிறீங்க. ஆனா அங்க இருந்து இங்க சஞ்சிகைகள் வாறது குறைவு. இதனால, உங்கட பிரச்சினைகளை இங்க இருக்கிறவங்க எல்லோரும் அறியிறதில்லை."

"என்னோட கதைச்ச ஆக்கள் சிலபேருக்கு விடயங்களை விளக்கமாகச் சொல்லியிருக்கிறன். அதுக்குப் பிறகுதான் கொஞ்சம் யோசிச்சுப் பாக்கினம். சிலபேர் இப்ப நடக்கிற சம்பவங்களைச் சொன்னால் நம்பக் கஷ்டப்படுகினம்.

ஸ்ரீராம் அர்த்தத்துடன் என்னைப் பார்த்தார்.

"எல்லோருக்கும் தங்கள் தங்கள் நாட்டில நம்பிக்கை அது தான்...."

"நான் சிலவேளைகளில் உணர்ச்சிவசப்பட்டுக் கதைச்சுப் போடுறன். பிறகு பயமா இருக்கும்."

இப்படி உணர்ச்சிவசப்பட்டுப் பேசிடாதீங்க. தனிய இருக்கப் போறீங்க. இங்க இருக்கிற சனங்கள், உங்களில சந்தேகப்பட்டா அப்புறம் பிரச்சினைதான். நான் இரண்டொரு நாளில டெல்லிக்குப் போயிடுவேன். கவனமாக இருந்துக்கோங்க."



"நீங்கள் சொல்லுறதும் சரிதான். சிலவேளை நான் கையில கொண்டுபோற பார்சலைக்கூட சந்தேகமாகப் பாக்கினம். கொஞ்சம் கவனமாகத்தான் இருக்கவேணும்."

"இங்க இருக்கிற ஆக்களில் நீங்க மட்டும்தான் சிலோன். உங்களுக்கு ரொம்பப் புரியவைக்கத் தேவையில்லை. அளவோடு பேசிக்கொள்ளுங்க."

★ ★ ★ ★

ஸ்ரீராம் டெல்லிக் போனது கஷ்டமாக இருந்தது. என் மனதைப் புரிந்த முதல் நண்பர்.

ஸ்ரீராமோடு அவரது அம்மாவும் அப்பாவும் என்னோடு நெருக்கமாகிவிட்டார்கள். ஸ்ரீராமின் அப்பா இடையிடையே கதைத்துவிட்டுப் போவார்.

நான் என் எண்ணப்படி தனியாக எங்கும் போய்வர ஆரம்பித்துவிட்டேன். எனது பேச்சுமுறை கொஞ்சம் கொஞ்சமாக மாறிக்கொண்டுவந்தது.

காலமும் விரைவாக ஓடியது. கதைகளிலே படித்த விடயங்களை நேரிலே பார்க்கும்போது, சந்தோஷமாக இருந்தது.

காலையிலே 'பால்கவர்' கொண்டுவரும் 'ஆயா' எனக்குப் பழக்கமாகிவிட்டாள்.

"பாவம். அம்மா சகோதரர்களை விட்டிட்டுவந்து இங்க இருந்து கஸ்ரப்படுற. நீ நல்லா இருப்பாய்."

அவள் அடிக்கடி இவ்வாறு சொல்வாள். மனதுக்கு ஆறுதலா இருக்கும். ஒருநாள் சுரேஷ் வந்து தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

நீங்க பி .˙.த்ப்ளோரில் இருக்கிறீங்கள். நான் பாத்திருக்கிறன் என்றேன்.

அவர் தலையசைத்துச் சிரித்தார்.

"நீங்கள் தமிழும் கதைக்கிறியள். ஹிந்தியும் கதைக்கிறீங்கள். ஏன் அப்பிடி?" என்றேன்.

'எங்கள 'சேட்' எண்டு சொல்வாங்க. வட்டிக்குப் பணம் கொடுக்கிறது எங்கட தொழில். நாங்க ஊர்விட்டு ஊர் வந்திருக்கோம்' என்றார்.

அவர், தனது குடும்பத்தைப் பற்றிச் சொன்னார். உடம்பு சரியில்லாத தனது அப்பா, சகோதரர்களோடு இருப்பதாகவும் சொன்னார். தான் தி.நகர் பஸ்ஸ்ரான்டின் பக்கத்திலே காமராஜர் கொலனிக்கு முன் கடை வைத்திருப்பதாகச் சொன்னார்.

ஒருமுறை பஸ் ஸ்ரான்டிற்குப் போய், சைதாப்பேட்டை போகும் வீதியில் நடந்து சுரேஷின் வட்டிக்கடையைப் பார்த்தேன். சுரேஷின் சகோதரர்களும் இருந்தார்கள். கடையின் உள்ளே போனேன், கதைத்தோம்.

மனித உறவில் மாற்றங்கள் தெரிந்தன. சிரித்தார்கள், நட்புறவாடினார்கள். இருந்தும் கதைக்கும்போது, மனதின் ஒரு மூலையில் லேசான நம்பிக்கையின்மை தென்படுவது போல இருந்தது.

இடையிடையே ஸ்ரீராம் சொன்னது நினைவுக்கு வந்தது. சிலவேளைகளில் நானும் என்னை மறந்துவிடுகிறேன்.

செட்டியார் சிலவேளை சேலம், நாமக்கல் என்று போய் விடுவார். இடையிடையே கணக்குளைத் தராமல் ஏமாற்றி விடுவதுண்டு. அந்த நேரங்களிலே, கெட்டித்தனமாகக் காரியங்களைக் கையாளவேண்டியிருந்தது.

★ ★ ★ ★

நான் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் - திருச்சி, மதுரை என்று எல்லா இடமும் சென்று வந்தேன். இங்கு தனியாக எத்தனை நாள் இருப்பது. இடங்களை எல்லாம் பார்க்கவேண்டாமா? திரும்பி எங்கள் பஸ்சில் வருவது சுலபமாக இருந்தது. எந்தநேரமும் ஏதாவது யோசனையில் மூழ்கியிருந்த எனக்கு, இப்படி இடம்விட்டு இடம் போய் வருவது மனதுக்கு நிம்மதியைக் கொடுத்தது.

"என்ன பேச்சைக் காணோம்?"

என்று பிரகாஷ் என்னைப் பார்த்துச் சிரித்தவாறு கேட்டான்.

"நான் என்ன சொல்லுறது? நீங்கள் கதைக்கிறதை நான் கேட்க வேண்டியது தான். நிலைமை அப்படி."

சுரேஷின் மூத்த அண்ணன் - பக்கத்திலிருந்து பார்த்த சாரதியின் காதிலே ஏதோ கூறினான்.

"முரளி! உம்மைப் பார்த்தாப் படங்களில் வரும் வில்லன் மாதிரி இருக்காம். அவங்கதான் தாடி வச்சிருப்பாங்க."

இதைக்கேட்ட மற்றவர்கள் பெரிதாகச் சத்தம் போட்டுச் சிரித்தார்கள். அது அந்த இரவிலே பெரிதாக எதிரொலித்தது.

"சிலோனில அதிகம் இப்படித்தான் மூஞ்சியைப்பாத்தே பிடிச்சிடலாம்" என்றார் பார்த்தசாரதி. அவர்களின் பேச்சு, அவர்களுக்கு இனிமையாப் போய்க்கொண்டிருந்தது. நானும் பேசாமல் கேட்டபடி இருந்தேன். இந்த நேரத்தில் மகாலஷ்மி தெருவில் வேகமாக வந்த வாகனம் எங்கள் வாசலில் பிரேக் பிடித்து நின்றது, பார்த்தோம்.

பொலிஸ் ஜீப்! "நம்ம இடத்தில இப்பதான் முதல் முதலா பொலிஸ் ஜீப் நிக்கிறது", கதவைத்திறந்து ட்ரைவர் இறங்கினார். முன் சில்லைத்தட்டிப் பார்த்தவுடன் ஏறி மறுபடியும் கிளப்பிக்கொண்டு கொண்டு போய்விட்டார்.

"போதும். போதும் சிலோன் காரருக்கு கோபம் வரப் போகிறது. நாம் போயிடலாம் வாங்க." பிரகாஷ் சொல்ல எல்லோரும் எழுந்தார்கள்.

எல்லோரும் போய்விட்டனர்.

நான் தனித்துவிடப்பட்டேன்.

காற்று மெலிதாக வீசியது. எங்கோ ரி.வி சப்தம் கேட்டது. தெருவிலே சிலர் நடந்துபோனார்கள்.

மனது அமைதியில்லாமல் இருந்தது.

அவசரப்பட்டு விட்டேனோ?

இந்தப் பேச்சுக்களைத் தடைசெய்ய முடியாது. அனுபவிக்க வேண்டியதுதான் எத்தனைகாலம். *(தொடரும்)*

# சருகுகளாய் நினைவுகள்

மெதுவாய் மல்லிகை நறுமணத்தோடு
மகிழ்வுகள்.
இம்மகிழ்வினைப் பெற
பல தியாகங்கள்.
நாம் நீண்ட காலங்களாகவே
நாறடிக்கப் பட்டிருந்தோம்.
மதம்பிடித்த யானைகளால்
மிதிக்கப்பட்டோம்.
சுதந்திரச் சேலை...
முட்களில் மாட்டிக்கொண்டது.
ஒருநாள் முற்றுமுழுதாய்
கிடைப்பது உறுதி.
போராடிப் போராடி தம்முயிரீந்த
எம்முயிர்களாலே...
இன்றுநாம் உலகில் உயர்ந்த
இனமாக இருக்கிறோம்.
அமைதி நிலையது கண்களில் தெரிகிறது.
அமைதிக்காய் உயிர்தந்த தியாகிகள்
மறக்கப்படக் கூடியவர்களல்ல!
நாளை; முழுஅமைதி நிலவும் வேளை
மகிழ்வுக் காற்றின் சருகுகளாய்
தியாகிகளின் நினைவுகள்
சலசலத்தபடி இருக்கும்

-கி.அ.தில்லைதாசன்

# நூல் அகம்

## புதிய தரிசனம்




'புதிய தரிசனம்' என்ற பெயரிலான கலை இலக்கிய, சமூக, அரசியல் சஞ்சிகை ஒன்று புதிய அறிமுகமாக வெளி வந்துள்ளது.

த.அஜந்தகுமாரைப் பிரதம ஆசிரியராகக் கொண்டு, இப்புதிய தரிசனம் வெளிவருகின்றது.

ஆசிரியர் குழுவில் உள்ளோர் அனைவரும் இளைஞர்களாகக் காணப்படுகின்றார்கள்.

'இன்றைய காலகட்டத்தில் இளைஞர் சமூகம் வழிதவறி, தவறான பாதையில் சுவடு பதிக்கிறது என்ற வார்த்தைகளுக்கு மத்தியில், இளைஞர்களாகிய நாம் எடுத்திருக்கின்ற இந்த முயற்சிகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் தருவீர்கள் என நம்புகின்றோம்' என்ற ஆசிரியரின் பேனாமுனை வார்த்தைகளோடு, பல்வேறு விடயங்களைத் தாங்கி, புதிய தரிசனம் வெளி வருகின்றது.

கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், நேர்காணல், பல்வேறு தகவல்கள், பொதுஅறிவு, பொன்மொழிகள், பழமொழிகள், அவசியம் அறியவேண்டிய அறிவியல் தகவல்கள் என்பவற்றைத் தாங்கி 'புதிய தரிசனம்' பல்வேறு பார்வைகளாகப் பரந்துள்ளது.

பொலிகையூர் சிந்துதாசன் எழுதிய 'நிழலிருப்பு' என்ற கவிதை, கவிஞர் புதுவை இரத்தினதுரையின் நினைவழியா நாட்கள் கவிதைத் தொகுதியிலிருந்து 'கழுகும் காட்டெருமையும் வயற்காரனும்' என்ற கவிதை, 'தேவதையோடுபோன யாத்திரையில் நிமிரும் சிற்பம்' என்ற இராகவனின் கவிதை, 'அவனுக்காக ஒரு வேதனை' என்ற கவிநேசனின் கவிதை, 'உண்மை புரிகின்றது' என்ற நிலாவின் கவிதை, 'மௌனத் தேடல்' என்ற அ.தில்லைதாசனின் கவிதை, 'இரத்த உறவுகளாம் உத்தமரை நம்பி' என்ற இளையநிலாவின் கவிதை என்பன, புதிய தரிசனத்தின் பார்வைச் சிதறல்களாயுள்ளன.

புதிய தரிசனம் சொல்லும் கதைகள் இரண்டு, அவற்றில் 'தா(நா)யுள்ளம்' என்பது சி.திருச்செந்தூரனால் எழுதப்பட்டுள்ளது. 'காணாமற்போன நவீனயுக இளைஞன்' என்ற நகைச்சுவைக் கதை நியுரனால் எழுதப்பட்டுள்ளது.

செய்குதம்பி பாவலரின் சிலேடைத் திறமையை விளக்கும் வகையில், 'பலே பாவலா' என்ற ஒரு கட்டுரையும், 'இன்றைய கவிதைகள், உரித்த வாழைப்பழங்கள் அல்ல' என்ற கவிதை பற்றிய விமர்சனக் கட்டுரையும், புதிய தரிசனத்தில் இடம்பெறுகின்றன.

கவிதை பற்றிய விமர்சனக் கட்டுரை, காலஞ்சென்ற தமிழ் இளம் விரிவுரையாளர் கமலரூபனால் எழுதப்பட்டதை, அவரின் மாணவனாக விளங்கும் புதிய தரிசனத்தின் ஆசிரியர் மறுபிரசுரம் செய்கின்றார்.

ஈழத்தின் மூத்த எழுத்தாளர் குப்பிளான் ஐ.சண்முகனது நேர்காணல் இந்தப் புதிய தரிசனத்தில் இடம்பெறுகின்றது.

சாகித்திய அக்கடமி விருது கிடைத்தபோது, யாழ்.நூலகம் எரிக்கப்பட்ட - இனக்கலவரம் நிகழ்ந்த காலப்பகுதியில் இப்பரிசினைப் புறக்கணிக்குமாறு ஒரு கோரிக்கை எழுந்தது.

பரிசுகிடைத்த 30 பேரில் இந்த எழுத்தாளரும், எஸ்.அகஸ்தியரும் பரிசினைப் புறக்கணித்தவர்களாகக் காணப்பட்டனர் என்ற தகவல், 'புதிய தரிசனம்' மூலமாகப் பெற்றுக் கொள்கின்றோம்.

'குளோனிங் முறையில் கோவேறு கழுதை', 'வீட்டிலும் தயாரிக்கப்படுகிறது குரூஸ் ஏவுகணை' என்கின்ற தகவல் கட்டுரையும்,

பொது அறிவுத் தகவல்கள், பொன்மொழிகள், பழமொழிகள், அவசியம் அறியவேண்டிய அறிவியல் தகவல்கள் போன்ற விடயங்களையும், 'புதிய தரிசனம்' எடுத்துக் கூறுகின்றது.

குறுக்கெழுத்துப்போட்டி, கவிதைப்போட்டி என்பவற்றையும் புதிய தரிசனத்தில் தரிசிக்கின்றோம்.

'வாசிப்பே சுவாசிப்பு' என்ற தன்மை, மீண்டும் புத்துயிர் பெறவைக்க வித்தாக நாமிருப்போம் என்ற நம்பிக்கை எம்முன் வேரூன்றியுள்ளது' என்ற திடத்தோடு -

'புழுதிப் புயலில் சிக்கவைக்கும் பண்பாட்டு அழிவைத் தூக்கிலிடுங்கள்', எழுதுகோல் தாங்கிய எங்கள் கரங்களைத் துக்கிவிடுங்கள் என்ற வேண்டுகோளுடன் வெளிவந்துள்ளது 'புதிய தரிசனம்'.

# சபிக்கப்பட்ட பூமி



இயற்கையும் இம்மண்ணை ஏன்தான் சபித்ததுவோ?
உயிர்த்துளியைக் கூட
உறுஞ்சி இறைக்கின்ற
வெயில்தானே இங்கே விசேட பரிசாகும்.
எப்போதும் அனற்காற்று இரைந்து சுழன்றுவரும்.
எண்ணையினைக் காணாத் தலைபோல்
தெருவீதி
என்றுமே தாரின்றி எங்கெங்குங் குண்டுகுழி
மிஞ்சக் கிடக்கும்
குலுங்கிவரும் வண்டிகளை
மூடும் புழுதி...பயணிகளைக் குளிப்பாட்டும்.
'பருவ' மழையென்று பெயர்தான்;
பருவமது
கிரமமாய் வராது கிரவல் வெடித்திருக்கும்.
"வாய்க்கால் எப்போ வரும் அமுதம்" என்றுவான்
பார்த்திருக்க...மூடிப்
படர்ந்த முள்ளுப் பற்றைகளுமே
கருகிக் கிடக்கின்ற புற்களும் சூழ்ந்துள்ள
மேய்ச்சல் நிலங்களிலே
வெறுவாயைச் சப்புகிற
மாடுகளோ...ஒட்டிவிட்ட வயிற்றோடு சாய்ந்துளன.
பட்டகாலினிலே படுவதுவாய்.
தினம்மாய்ந்து
கெட்ட குடியே கெட்டுத் தொலைவதுவாய்.
கலைந்த தலையோடு
எலும்பினிலே தோல்சுற்றி
வரண்ட முகங்களொடும் வெறித்த விழிகளோடும்
துயர்தாங்கித் தாங்கிக்
காய்ந்த தோள் கரங்கள்
அசைந்துவர. மக்கள் வெயிலில் வெறுங்கால்கள்
காய்த்துத் திரிகின்றார்.
பயணிகளைக் கசக்கியேற்றும் பஸ்கள்
தம் கஷ்டத்தை
கடகடத்துச் சொல்லிச் சேடம் இழுத்தபடி.
சீவன் தொலைத்தபடி அடிமாடாய் உழைத்துளன.
வியர்வை புழுதியுடன்
உறவாடி வாழ்க்கை உலர்ந்து நகர்கிறது
ஏதேதோ உயர்ச்சிகளாம் எண்திசையில்....
ஏன்தானோ
சோகங்கள் மட்டும் இம்மண்ணில் சுவறிற்று
முகத்தில் அறைகிறது வெயில்
நெஞ்செரிக்கிறது.

-ஜெயங்கொண்டான்

# ஆறும் நானும்




எந்தனது பாதை எதிரில் ஒரு பாம்பாய்,
நெளிந்தபடி சிவப்பாறு
ஓடிக்கொண்டிருக்கிறது.
சலசலத்துக் கொண்டு அது நகர்கிறது.
பீறிட்டவ்
ஆறடித்துச் செல்கையிலே
ஆங்காங்கு கரைகளிலே
காதுகள், கண்கள், கழுத்தில்லாத் தலை, முண்டம்,
கால்கள், கரங்கள்.
துண்டாடப் பட்டகுறி,
துடிப்பினது ஓசை துளித்துளியாய் வடிந்தபடி
இதயங்கள்,
என்று... எவையெவையோ ஒதுங்கிக்
கிடந்துள்ளன!
சிவப்பாறு உற்சாக வீரனெனப்
படர்கிறது!
நானந்த ஆற்றைச் சபித்தபடி
நடக்கின்றேன்!
அவ்... ஆறு தனது பெருமைகளை,
தனது குலப்புகழை,
தனது நதிமூலத்தை,
அலையிசையுஞ் சேர்த்து சுயபுராணமாய்ப் பாட...
பிணமணமும் இரத்தமணமுங் கமழ்ந்துவர...
நடக்கின்றேன் என்பாட்டில்!
நானறிவேன்
இவ்வாறு
எந்தன் நிலத்தில் உதித்ததல்ல. இவ்... ஆறு
எந்தன் கழனிகளை வளர்த்ததல்ல. இவ்... ஆறு
எந்தன் தலைமுறையைக் காத்ததல்ல. இவ்... ஆறு
எங்களினை மீட்பதற்கு வந்ததல்ல.
என அறிவேன்.
ஆனாலும் அவ் ஆற்றை வற்றவைக்கத் திராணியற்று
மூன்றுமுறை துப்பி
முழுதாய்ச் சபித்துவிட்டு
நடக்கின்றேன்;
ஆற்றின் எதிர்த்திசையில் நடக்கின்றேன்.

த.ஜெயசீலன்

# கிழக்கும் மேற்கும்

## மூன்றாம் செழியன் - செல்வி நைற்றிங்கேல்



போர்க்களங்களிலே வெற்றித் திருமகள்
முத்தமிட் டளித்திட்ட முத்திரை களாகிய
விழுப்புண்கள் பெற்ற போர் மறவர்களைத் -
தன்பெரு வெற்றிக்கு ஊன்றுகோலாய் நின்ற
படை வீரர்கள் ஓய்வு கொண்டிடும்
பாசறை களிலேயே மன்னனின் பொழுதெலாம்!!
அவர்களோ டன்புடன் கலந்துரை யாடினான்!!
அவர்களின் நலன்களை விருப்புடன் கேட்டான்!
வீரரும் தாம்கண்ட செருக்களங் களிலே
விளைத்திட்ட அரும்பெரும் சாதனைச் செயல்களைத்
தம்மையும் மறந்து தம்மன்ன னிடத்தினில்
விளக்கிடும் வேளையில் தம்துயர் மறந்தனர்!
வீரர்களிடையே விழுப்புண் களுக்கிட்ட
மருந்து களுடனே மன்னனும் சொரிந்த
அன்பு விசாரணைகளும் ஆறுதல் வார்த்தைகளும்
அவர்களின் புண்களை விரைந்து குணமாக்கின!
இதுவேதன் தினசரிப் பணியெனக் கொண்டான்!!
மன்னன் செழியனின் தேறுதல் வார்த்தையால்
வீரரின் வாழ்க்கை மலர்ந்தது மீண்டும்!

வீரருக் கெல்லாம் பாராட் டுரைகள்
வழங்கிப் போற்றினான் மூன்றாம் செழியன்!
வீரர்தம் மேனியில் கொண்ட புண்களால்
விளைந்த துயர்களை மறந்துளம் மகிழ்ந்தனர்!
வாழ்க்கையின் மேலவர் நம்பிக்கை கொண்டனர்!
போர்களில் மீண்டும் மோகம் கொண்டனர்!
போர்க்களம் மீளவும் போகவும் துடித்தனர்!
தன்ஊண் உறக்கம் என்பன மறந்தான்!
தன்உடற் சோர்வு - ஓய்வினை மறந்தான்!
அந்த நேரங்களைப் - போர்க்களங்களிலே
அச்சம் இன்றியே வெஞ்சமர் புரிந்ததன்
ஒவ்வொரு வீரர்க்கும் ஆறுதல் தேறுதலும்
பாராட்டும் போற்றலும் வாழ்த்தும் மொழிவதில்
மூன்றாம் செழியன் மனமகிழ் வுற்றான்!
வீரரின் மகிழ்ச்சியில் மன்னனும் மகிழ்ந்தான்!
வீரரின் மத்தியில் மதிப்புடன் அன்பும்
மன்னன் மீதினில் நாள்தோறும் வளர்ந்தது!
தாதியாய் நின்றுதன் வீரரைப் பேணிய
தாயாக நின்றுதன் வீரரைப் போற்றிய
மூன்றாம் செழியன் கல்வியில் வல்லவன்!
கற்றோரைப் போற்றிப் புரப்பதில் வல்லவன்!
பத்துப்பாட்டில் இருபெரும் நூல்களாம்
புலவர் நக்கீரனின் "நெடுநல் வாடை" யும்
மாங்குடி மருதனாரின் "மதுரைக் காஞ்சி" யும்
மாமன்னன் செழியனின் பெரும்புகழ் புகல்வன!!

* * *

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப் பகுதியினில்
ரஷ்யாவும் துருக்கியும் பெரும்பகை கொண்டன!
பிரித்தானியா பிரான்ஸ் எனும் நாடுகளின்
பெரும் ஆதரவுடனே ரஷ்யா மேலே
போரொன்றைத் தொடுத்தது துருக்கிநாடு!
"கிரிமியப் போர்" என்பர் இப்போரை!!
களத்தினில் போர்வீரர் பலநூறாய் மாண்டனர்!

(தொடரும்)

முருகு

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*நாடுஎன்ப நாடா வளத்தன நாடுஅல்ல*
*நாடா வளந்தரும் நாடு.*

*திருக்குறள்.*

# நமது நோக்கு

## அகதிகள் அவலம் தீருமா!

1983 இல் யுத்தம் தீவிரமடையத் தொடங்கிய பின்னர், தமிழர் தாயகத்தில் நிலவிய அச்சமான சூழ்நிலையால் பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள் இந்தியாவை நோக்கி அகதிகளாகப் புலம்பெயரத் தொடங்கினர்.

1990இல் இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்தபோதும், பெருமளவிலான தமிழ்மக்கள் தமிழகத்திற்குப் புலம்பெயர்ந்தனர். இவ்வாறு, தமிழகத்தில் அடைக்கலம் தேடிய ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் கடந்த பலவருடங்களை அங்கேயே கழித்துவிட்டார்கள்.

ஆனால், இப்போது அங்கு தங்கியுள்ள ஈழத் தமிழர்கள் தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதில், பலத்த பிரச்சினைகளையும் பின்னடைவுகளையும் சந்தித்து நிற்கின்றனர்.

இரண்டு வாரத்துக்கு ஒருதடவை வழங்கப்படும் குறிப்பிட்டளவான உணவுப் பொருள், நிவாரண உதவியைத்தவிர வேறெந்த வசதிகளும் அற்ற நிலையில் தமிழக அகதி முகாம்களில் ஈழத்தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களுக்கான அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்டு - மிகவும் குறைந்த வாழ்க்கைத்தரத்துடனேயே வாழவேண்டிய நிலையில் உள்ளனர்.

தாயகத்தில் தற்போது நிலவும் அமைதியான சூழ்நிலையை அடுத்து - தமிழக அகதிமுகாம்களில் வாழும் மக்கள், தமது சொந்த இடங்களுக்குத் திரும்பத் தொடங்கியுள்ளனர்.

சொந்த மண்ணிலாவது, நிம்மதியாக வாழ்வோம் என்ற கனவுடன், தாயகம் திரும்பும் இந்த மக்களைச் சரியான முறையில், சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவதற்கான வழிவகைகள் செய்யப்படவில்லை.

தமிழகத்துக்கு இடம்பெயர்ந்து சென்றபோதும், இவர்கள் அபாயகரமான சூழலில், உயிரைக் கையில் பிடித்தபடிதான் சென்றனர். மீளத் திரும்பும் போதும், இதேவகையில் - உயிரைக் கையில் பிடித்தபடி பாதுகாப்பற்ற நிலையில்தான் நாடு திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.

இந்திய மீன்பிடிப்படகுகளில் பெருந்தொகையான பணத்தை - தாம் சேமித்து வைத்திருந்த குறைந்தளவு பணத்தில் செலவிட்டுத்தான், இவர்கள் தமது பயணத்தைத் மேற்கொள்கின்றனர்.

இவர்களைத் தமிழகத்திலிருந்து தாயகத்துக்கு திருப்பி அனுப்பிவைப்பதற்கு, எவருமே கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை. அகதிகளுக்கான ஐ.நா. தூதுவராலயங்களிலும் சரி, இலங்கை தூதரகமாயினும் சரி, தாயகம் திரும்பும் அகதிகளைப் பாதுகாப்பாக அனுப்பிவைக்க எந்த நடவடிக்கையும் எடுக்காதிருக்கின்றன.

இந்த நிலையில்தான், தாமாகவே பாதுகாப்பற்ற சூழலில், இந்திய மீன்பிடிப்படகுகளில் நாடு திரும்புகின்றனர். இவர்களை இந்திய மீன்பிடிப் படகுகள் இலங்கைக் கரையில் கொண்டு வந்து தரையிறக்காமல், ஆங்காங்கே மணற்பிட்டிகளிலும், நெடுந்தீவிலும் தரையிறக்கிவிட்டுச் சென்று விடுகின்றன.

இவ்வாறு, தரையிறக்கி விடப்படும் மக்களில் பலர் - பலத்த சிரமங்களையும் ஆபத்துக்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளனர்.

இந்தநிலை தொடர்ந்தும் நீடிக்கின்ற போதும்- இது குறித்து எவருமே கவனத்தில் கொண்டதாக இல்லை. தமிழகத்திலிருந்து திரும்பும் அகதிகளை பாதுகாப்பாகத் தமது சொந்த இடங்களில், குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு எவரும் கரிசனை செலுத்தாதது கவலைக்குரியதாகும்.

இந்நிலை தொடர்ந்தும் நீடிக்காமல் - தமிழக அகதி முகாம்களில் தங்கியுள்ள மக்களைத் தமது தாயகத்துக்கு கொண்டு வந்து, குடியமர்த்துவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். கடந்த இரண்டு தசாப்த காலமாக தாயகத்துக்கான தொடர்புகளை இழந்து கஷ்ரப்பட்ட எமது மக்களுக்கு, இனிமேலாவது நிம்மதியான வாழ்வு கிட்ட வழிவகை செய்யப்படுவது அவசியமாகும்.

# இருபதாண்டு கால கொடூர யுத்தத்தினால் தாய், சேய் சுகாதாரக் கட்டமைப்பு சீரழிவு

## இலங்கைக்கான யுனிசெப் பிரதிநிதி

வடக்கு - கிழக்கு பகுதிகளில் தாய் - சேய் நல சுகாதார வசதிகள் மிகவும் மோசமான நிலையில் இருந்துவருகின்றது. அந்த வசதிகளை - அபிவிருத்தி செய்ய வழங்கப்பட்ட ஜப்பானிய உதவி, வடக்கு - கிழக்குப் பகுதி மக்களின் ஆயுள் நீடிப்புக்கு உதவும் என்று, இலங்கைக்கான யுனிசெப் பிரதிநிதி ரெட் சாய்பாள் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சுகாதார அமைச்சில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் -

குழந்தைகளுக்கும், தாய்மாருக்கும் ஒருகாலத்தில் அதியுயர் சேவைகளை வழங்கிய சுகாதாரக் கட்டமைப்பு, கடந்த 20 ஆண்டுகால யுத்தத்தால் சீரழிந்துவிட்டது.

வட - கிழக்குப் பகுதிகளிலுள்ள சில வைத்தியசாலைகளில் தீவிர கண்காணிப்புச் சேவைகள், ஆய்வுகூடப் பரிசோதனை வசதிகள், இரத்தவங்கி, அம்புலன்ஸ் வசதிகள் போன்றனவும் போதியளவில் இல்லை. இப்பற்றாக்குறைகள் கர்ப்பிணிகளையும், ஏனைய பெண்களையும் பெருமளவில் பாதித்ததுடன், அவர்களது உயிரைப் பாதுகாக்கத் தேவையான அவசரகால மகப்பேற்றுச் சேவைகளை வழங்குவதிலும் பிரச்சினையாக இருக்கிறது.

வடக்கு - கிழக்கில் போஷாக்கின்மையால், ஏறத்தாழ நான்கில் ஒரு குழந்தை நிறைகுறைந்தே பிறக்கிறது. தேசிய ரீதியில் இது 29 வீதமாகும். ஒரு பிள்ளை அதன் முழுமையான ஆற்றலையும், திறனையும் அடைவதற்கு இப்போஷாக்கின்மை பெரும் தடையாக இருக்கிறது.

குடிநீர் வசதிகள் மற்றும் சுற்றுப்புறச்சுழல் நிலைமைகளும் பற்றாக்குறையாகவே உள்ளது. சில இடங்களில் 20 வீதத்திற்கும் குறைவானவர்களுக்கே பாதுகாப்பான குடிநீர் கிடைக்கிறது. அநேகமாக எல்லாச் சுகாதார நிலையங்களுக்கும் குடிநீர் வசதிகளும் மற்றும் சுற்றுச்சூழல் வசதிகளும் வழங்கப்பட வேண்டியுள்ளது.

பிள்ளைகள் ஆரோக்கியத்துடன் வளர உதவவேண்டிய இந்நிறுவனங்களும், அமைப்புகளும் அவர்களது வளர்ச்சிக்கும், விருத்திக்கும் உதவாதிருப்பது துரதிர்ஷ்டவசமானதாகும்.

அரசுக்கும், புலிகளுக்கும் இடையே தற்போது ஏற்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைச்சூழல், வடக்கு - கிழக்கில் அபிவிருத்தியை மேம்படுத்தவும், புனர்நிர்மாணம் செய்யவும் உரிய சந்தர்ப்பங்களை வழங்கியுள்ளது.

பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் தேவையான சுகாதார சேவைக் கட்டுப்பாடுகளைப் பலப்படுத்தி நிவர்த்திசெய்ய ஜப்பானிய அரசாங்கத்தின் உதவி பெருமளவு உதவும்.

யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட வட - கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் - உள்ளூரில் அகதிகளாகவுள்ள பெருமளவு மக்கள் வசிக்கும் மேற்படி எட்டு மாவட்டங்களை அண்டிய 3 மாவட்டங்களிலும் ஜப்பானிய உதவித்திட்டம் அமுல்செய்யப்படும்.

தாய் - சேய் நலன் தொடர்பான சேவைகளை - பத்து முக்கிய வைத்தியசாலைகளில் கட்டியெழுப்ப அல்லது புனர்நிர்மாணம் செய்யவும், கர்ப்பிணிப் பெண்களுக்கு அவசரகால பிரசவ வசதிகளை வழங்கவும், புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்குரிய சேவைகளை வழங்கவும், இவ்வசதிகள் பயன்படும். சுகாதார வசதிகள் குறைவாகவுள்ள பிரதேசங்களில், 10 தாய்- சேய் நலன் பேணும் நிலையங்கள் அமைக்கவும், இத திட்டம் உதவும். இது தாய் - சேய் சுகாதார சேவைகளை விஸ்தரிக்க உதவுவதுடன், 28 ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு நிலையங்களது சேவைத் திறனைப் பல்படுத்தி அதிகரிக்க உதவும்.

அத்துடன், ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு நிலையங்களில்- குடிநீர் விநியோகம், சுற்றுப்புறச் சூழல் அபிவிருத்தித் திட்டங்களையும் புதிதாக அமைக்கவும் அல்லது புனரமைப்புச் செய்யவும் உதவும். தடுப்பு மருந்தேற்றல் நடவடிக்கைகளைப் பலப்படுத்தல், வயிற்றோட்டம் சார் நோய்களைக் கட்டுப்படுத்தல் போன்றவற்றுக்கும் இத்திட்டம் உதவும். அத்துடன், அத்தியாவசிய மருந்துப் பொருட்களின் விநியோகத்திற்கும் இது உதவும்.

சமாதானத்தில் அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் காட்டும் அக்கறையைத் தொடர்ந்து வட - கிழக்குப் பகுதியிலுள்ள பெண்களதும், பிள்ளைகளதும் சுகாதார நலனை மேம்படுத்தக் கூடிய சந்தர்ப்பமும், வாய்ப்பும் மேலும் கிடைக்கும் என்பதில் எனக்கு முழு நம்பிக்கையுள்ளது என, அவர் மேலும் தெரிவித்தார்.

# தனியார்மயமாக்கல் நடவடிக்கை; கட்சிகள், தொழிற்சங்கங்கள் ஆராயும்

(கொழும்பு)

அரச திணைக்களங்களைத் தனியார்மயப்படுத்துவது தொடர்பாக - பத்து அரசியற்கட்சிகளினதும், நூறு தொழிற்சங்கங்களினதும் பிரதிநிதிகள் கூடி ஆராயவுள்ளதாகத் தெரிவருகிறது.

தற்போது அரச திணைக்களங்களில் - சுகாதாரம், வருமானம், புகையிரதம் உட்பட 67 அரச திணைக்களங்களைத் தனியார்மயப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் கிடைத்திருப்பதாக, ஐ.தே.கட்சியினர் தெரிவிக்கின்றனர்.

# குரங்குப்பாஞ்சான் முகாம் அகற்றினால் நான்காவது ஈழ யுத்தம் வெடிக்குமாம்!

## லங்காதீப எச்சரிக்கிறது

திருமலை - குரங்குப்பாஞ்சானில் அமைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் முகாமை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமானால், 4 ஆவது ஈழயுத்தத்தை விடுதலைப் புலிகள் ஆரம்பிக்கவுள்ளதாக, அரசின் புலனாய்வுப் பிரிவினருக்குத் தகவல் கிடைத்திருப்பதாக, லங்காதீப செய்தி வெளியிட்டிருக்கிறது.

இது குறித்து நிலைமைகளை ஆராய்வதற்காகவே, அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கிழக்கு மாகாணத்திற்குச் சென்றிருந்ததாகவும், லங்காதீப செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஏழு மாகாண சபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தல் நடக்கும்

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாணசபைகளின் ஆயுட்காலம் அடுத்த வருடத்துடன் முடிவடைவதால், ஏழு மாகாணசபைகளுக்கும் உரிய தேர்தலை ஒரேநாளில் நடத்தத் தீர்மானித்திருப்பதாக, தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

சுயாதீன தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்படாமையினால், ஒரேநாளில் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதன்மூலம் நிதிச் செலவுகளைக் குறைக்கவும், வன்முறைகளைக் கட்டுப்படுத்தவும் முடியும் என, அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா தனக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி, எதிர்வரும் 12 ஆம் திகதியுடன் மாகாணசபைகளைக் கலைக்கத் தீர்மானித்திருப்பதாகத் தனக்குத் தகவல் கிடைத்திருப்பதாக - உள்ளூராட்சி மாகாண சபைகளின் அமைச்சர் அலுக் அலுவிகார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக - ஜனாதிப்தி, அரசாங்கத்துடன் கதைத்தாரா என்பதுபற்றித் தெரியாதபோதும், ஐ.தே.கட்சி அரசாங்கம் மாகாண சபைகளின் தேர்தலை எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மூன்று நாட்டு நாடாளுமன்றங்களுக்கு கட்சிகளின் தலைவர்கள் குழு விஜயம்!

(கொழும்பு)

சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையிலான் கட்சித் தலைவர்களின் குழுவொன்று - மூன்று நாடுகளின் நாடாளுமன்றங்களுக்கு விஜயம் செய்யவுள்ளது.

நாடாளுமன்றக் குழுக்களின் முறைமை மற்றும் செயற்பாடுகள் குறித்து ஆராயவே, இந்தக் குழு அடுத்த மாதம் தனது பயணத்தை ஆரம்பிக்கவுள்ளது.

இந்தக் குழு - ஜேர்மனி, கனடா, தென்னாபிரிக்கா ஆகிய நாடாளுமன்றங்களின் குழுக்களின் செயற்பாடுகளை அவதானித்து இலங்கை நாடாளுமன்றத்தின் செயற்பாடுகளை நவீன மயப்படுத்துவது குறித்து ஆராயும்.

சபைத் தலைவர் டபிள்யூ. ஜே. எம்.லொக்குபண்டார, நாடாளுமன்ற விவகார அமைச்சர் எ.எச்.எம். அஸ்வர் மற்றும் அமைச்சர் மகிந்த சமரசிங்க ஆகியோரும் இந்தக் குழுவில் இடம்பெறவுள்ளனர்.

இந்தப் பயணத்துக்கான நிதிச் செலவுகளை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டமும், ஜெனீவாவை தலைமையகமாகக் கொண்ட நாடாளுமன்றங்களின் ஒன்றியமும் பொறுப்பேற்கவுள்ளன.

இந்த விஜயத்துக்கான ஒருங்கமைப்பாளராக தொழில், தொழிற்பயிற்சி அமைச்சர் மகிந்த சமரசிங்க செயற்படுவார் எனத் தெரியவருகின்றது.

# எதிர்க்கட்சிகளின் போராட்டங்களினால் தடுமாறத் தொடங்கியுள்ள அரசாங்கம்!

## தெற்குத் திசையினிலே...

### கொழும்பிலிருந்து இந்திரஜித்

இலங்கையின் அரசியல் நிலைமை நாளுக்குநாள் மோசமடைந்து வருகிறது. அரசாங்கம் - சமாதானம் என்ற பெயரில், ஆட்சி நடத்திக்கொண்டிருக்க, மறுபுறத்தில் அரசாங்கத்துக்கு எதிரான சக்திகளும், நாளுக்குநாள் தீவிரமான முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றன.



சந்திரிகா

முன்னர் தென்னிலங்கையில் போராட்டங்கள் இடம்பெற்றபோதும், அவை ஒரு காலகட்டத்துக்கு அப்பால் கொண்டுசெல்லப்படவில்லை. தென்னிலங்கைப் போராட்டங்களுக்கு இதனால்தான் ஆயுட்காலம் குறைவு என, வெளிநாட்டு அரசியல் வல்லுநர்கள் இலங்கை அரசாங்கத்துக்கும் தெரிவித்து வந்தனர். அதன்படியே, அரசாங்கமும் தென்னிலங்கையில் ஏதாவது திட்டமொன்றைச் செயற்படுத்த வேண்டுமானால், எதிர்ப்புக்கு மத்தியில் அதனைச் செய்துமுடித்திருந்தது. இதற்கு உதாரணமாக, 1989 ஆம் ஆண்டின் மாகாணசபைகள் உருவாக்கப்பட்டதை குறிப்பிடலாம். 1971 மற்றும் 1987 ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சிகள் - 1970 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிறிமாவின் ஆட்சிக்கு எதிராக, ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்ப்புக் கோஷங்கள் என்பன, ஆட்சி மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய அளவுக்குச் செல்லவில்லை. தேர்தல்களின் போதே, ஆட்சிமாற்றங்களைக் காணக்கூடியதாக இருந்தது.

அன்று இலங்கையின் பொருளாதாரம், இன்றுபோலவே ஸ்திரமற்ற நிலையில் இருந்துவந்தது. ஆனால், வெளிநாடுகளின் பாரிய தலையீடுகள் இருக்கவில்லை. வெளிநாடுகளின் தலையீடுகள் அதிகமாகப் பொருளாதார மையங்களையே குறிவைத்து நின்றன. இன்று வெளிநாட்டு நடவடிக்கைகள் இலங்கையின் அரசியலில் மாற்றங்களை ஏற்படுத்திவருகிறது. இந்தியா, நோர்வே, அமெரிக்கா என இலங்கையின் அரசியலில் செல்வாக்குச் செலுத்தி நிற்கின்ற நாடுகளின் பட்டியலில் - இன்று ஜப்பானும் இணைந்து கொண்டுள்ளது.

ஜப்பான் முன்னைய காலங்களிலிருந்தே, இலங்கையுடன் சிறந்த புரிந்துணர்வைக் கொண்டுள்ளது. எனினும், அந்த நாடு இலங்கையின் அரசியலில் பெரிதான செல்வாக்கைச் செலுத்தியதில்லை. இன்று அந்த நிலைமை, மாறியுள்ளது. ஜப்பான் - இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் தாமும் ஒரு ஏற்பாட்டாளராகச் செயற்பட முனைகிறது. இதற்குக காரணமாக - இலங்கைமீது ஜப்பானுக்கு இருக்கும் நல்லெண்ணம் எனக் கூறினாலும், அதனைவிட ஜப்பானுக்கு இலங்கையில் கிடைக்கும் வர்த்தக இலாபம் இங்கு முதன்மை பெற்றுள்ளது என்பதே உண்மை.

மறுபுறத்தில் முன்னர் வெளிநாடுகளுடன் - இலங்கை உறவுகளைக் கொண்டிருந்தாலும், இலங்கையின் பிரச்சினையில் தலையிடக்கூடிய அளவுக்கு வெளிநாடுகளுக்கு வாய்ப்புக்கள் அமைந்திருக்கவில்லை. அதாவது, இலங்கையில் இருந்துவந்த இனப்பிரச்சினை, சர்வதேசமயப்படுத்தப்படவில்லை. அது உள்நாட்டுப் பிரச்சினை எனக்கூறி, அதன் தாக்கத்தை அல்லது உண்மைத்தன்மையைக் குறைக்கும் நடவடிக்கைகளையே இலங்கையின் அரசாங்கங்கள் மேற்கொண்டு வந்தன.

தமிழர்களின் பிரச்சினை தொடர்பாகத தமிழர் தரப்புக்கள் - சர்வதேச மட்டத்தில் பிரசாரங்களை மேற்கொண்ட வேளையில், அதற்கு இலங்கை அரசாங்கமும் மாற்றுப் பிரசாரங்களை மேற்கொண்டு வந்தது. இலங்கையில இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லை. அங்கு இருப்பது பயங்கரவாதப் பிரச்சினையே என, இலங்கை அரசாங்கங்கள் எதிர்ப் பிரசாரங்களைச் செய்துவந்தன. இந்த எதிர்ப்பிரசாரங்கள் - பெரும்பாலும் இலங்கையின் அரசாங்க இயந்திரத்திற்கு நன்மைகளை ஏற்படுத்தின என்றே கூறவேண்டும். ஆனால், மூடிமறைக்கப்பட்டு வந்த உண்மைகள் வெளிப்பட்டபோது, இலங்கையின் அரசாங்க இயந்திரமே முன்வந்து, தமது நாட்டில் இனப்பிரச்சினை இருக்கிறது என்பதை ஏற்றுக்கொண்டது.



அரசுக்கு எதிராக பிக்குகள் பிரசாரம்

முதலில் இந்தப் பிரச்சினையை உள்நாட்டிலேயே தீர்த்துக்கொள்ள முயற்சி மேற்கொள்ளப்பட்டபோதும், தமிழ்ப் போராளி இயக்கங்களுக்கும், இலங்கையின் அரசாங்கங்களுக்கும் இடையில் புரிந்துணர்வு இல்லாமல் போனமையால், மூன்றாம்தரப்பு நாடு ஒன்று தலையிட வேண்டியிருந்தது.

இவ்வாறு ஆரம்பித்த அந்த நாடுகளின் வரிசையில் - இன்று ஜப்பானும் இணைந்துள்ளது. மத்தியஸ்த நாடுகள் அதிகரித்து வந்துள்ளமையும்கூட, இன்று இனப்பிரச்சினை தீர்வுக்கு ஒரு தடையாக இருக்கிறது என்பதைக் காணலாம். இனி இவ்வாறான வெளிநாட்டுத் தலையீடுகள், தென்னிலங்கையின் போராட்டங்களில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன எனப் பார்ப்போம்.

இலங்கையில் - இந்தியா, நோர்வே, அமெரிக்கா போன்ற நாடுகளின் தலையீடுகளை எதிர்க்கும் சக்திகள், இன்று பெருகிவருகின்றன. அவை பெரும்பாலும் வெளிநாட்டு சக்திகளாக இருந்து வருகின்றன. அரசாங்கம் ஒன்று ஏதாவது நாட்டுடன் நெருங்கிய உறவைக்கொண்டு, அதன் அபிலாஷைகளை தமது சொந்த நாட்டுக்குள் நடைமுறைப்படுத்தும்போது, அதற்கு எதிராக உள்நாட்டுத் தீவிரவாத அமைப்புக்கள் மற்றும் எதிர்க்கட்சியினர் போராடுவது இயல்பானது. அந்த வகையில், இன்று நாட்டில் நடைபெறும் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களுக்கு, வெளிநாட்டு சக்திகள் உதவுவதாகவே குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. இதில் பிரதானமாக - வெளிநாடுகளின் உளவுப்பிரிவுகளைக் குறிப்பிடலாம்.


இவை உள்நாட்டில் அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டம் நடத்தும் பிரிவுக்கு நிதியுதவிகளை வழங்கிவருகின்றன. தென்னிலங்கையைப் பொறுத்தவரையில், இவ்வாறான போராட்டங்களுக்கு நிதிப் பங்களிப்புகள் இல்லாமை காரணமாகவே, முன்னர் அவை குறுகிய காலங்களுக்கு மாத்திரம் தமது தீவிரத்தைக் கொண்டிருந்தன. பின்னர், செயலிழந்து போயிருந்தன.

ஆனால், இன்று அரசாங்கத்துக்கு எதிராகப் போராடும் தென்னிலங்கை இயக்கங்களுக்கு - வெளிநாட்டு சக்திகள் உதவுகின்றன. அதேநேரம், வெளிநாட்டில் இருக்கும் இந்த தென்னிலங்கை இயக்கங்களின் ஆதரவாளர்களும், அங்கு பிரசாரங்களை மேற்கொண்டு, நிதிச் சேகரிப்பில் ஈடுபட்டுவருகின்றனர். மக்கள் விடுதலை முன்னணி, சிஹல உறுமய போன்ற அமைப்புகளுக்கு - வெளிநாட்டு நிதியுதவிகள் கிரமமாகக் கிடைத்து வருகின்றமை, பல்வேறு சந்தர்ப்பங்களில் உறுதி செய்யப்பட்டுள்ளன.

எனவே, தென்னிலங்கையில் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்கள் முன்னரைப் போன்று குறுகிய காலத்துக்குள் முடிவுறுத்தப்படும் வாய்ப்புக்கள் இல்லை என்றே கருதப்படுகிறது. அதேநேரம், இன்று அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில், போராட்டங்கள் நடைபெறுவதற்கான காரணங்களுக்குரிய தீர்வை வழங்குவதில் இயலாத தன்மை ஏற்பட்டுள்ளமை, போராட்டங்களுக்கு உரமூட்டும் செயற்பாடாக இருந்து வருகிறது.

அரசாங்கம் தாம் எதிர்பார்த்த வெளிநாட்டு நிதியுதவிகள் கிடைக்கும் வரையில், ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு தொடர்பிலோ அல்லது ஏனைய விடயங்கள் தொடர்பிலோ உறுதி மொழிகளை வழங்கத் தயாரில்லை. எனவேதான், அது தொழிற்சங்கப் போராட்டங்கள் தொடர்பில், அமைதிப்போக்கை கடைப்பிடித்து வருகிறது.

மறுபுறத்தில் இடைக்கால நிர்வாகம் மற்றும் அரசியல் தீர்வு முன்னெடுப்புக்களுக்கு எதிராக, மக்கள் விடுதலை முன்னணி மற்றும் சிங்கள அமைப்புக்கள் மேற்கொண்டுவரும் எதிர்ப்பு நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில், அரசாங்கத்திற்கு இந்த நிதிப்பற்றாக் குறையே பெரும் சவாலாக இருந்து வருகிறது எனக் கூறலாம். நாட்டில் அபிவிருத்தி நடைபெறுகின்றவேளையில், அரசாங்கத்தினால் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காணமுடியும். அதேநேரம், தேசிய பிரச்சினைக்கான தீர்வினையும், தீவிரமாக முன்னெடுத்து செல்லமுடியும். ஆனால், தற்சமயம் இலங்கையைப் பொறுத்தவரையில், அரசாங்கம் - தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முனைப்பை மேற்கொண்டுவருகிறது.



மகிந்த ராஜபக்ஷவும், வீரவன்சவும்

இதற்கு மத்தியில் அரசாங்கம் - தொழில் பிரச்சினைகள், வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் அழுத்தங்கள் மத்தியிலான தனியார் மயப்படுத்தல். இதற்கு எதிராக நடத்தப்படும் ஆட்சேபப் போராட்டங்கள் என்பவற்றைச் சமாளிக்க வேண்டியுள்ளது.

அதற்கு அப்பால், ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்துக்கு மத்தியில் எந்த நேரமும் ஆட்சிக் கலைப்பு, அச்சுறுத்தல்களுக்கும் - அரசாங்கம் முகங்கொடுத்து வருகிறது. எனவே, அரசாங்கம் எதிலுமே முழுக் கவனத்தைச் செலுத்தமுடியாதநிலை தோன்றியுள்ளது. உள்நாட்டில் இவ்வாறான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ள அரசாங்கம், அதற்கு அப்பால் இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளின் நலன்களுக்கு விரோதமற்ற வகையில் செயற்படும் தன்மையிலும் கவனம் செலுத்தவேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளது.

தற்போதையநிலையில், அரசாங்கம் தமது ஆட்சியை நகர்த்திச் செல்வதில், பாரிய நெருக் கடிநிலையைச் சந்தித்துள்ளது.

நாட்டில் இடம்பெற்றுவரும் போராட்டங்களைத் தடுப்பதற்கு முயற்சித்துவரும் அரசாங்கத்தினால், அதற்கு தீர்வுகளை முன்வைப்பதற்கு இயலாதநிலை தோன்றியுள்ளது. இந்த நிலைமை - மாற்றுத்தரப்பான ஜனாதிபதியின் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு, மக்கள் ஆதரவை ஏற்படுத்திக்கொடுக்கும் சந்தர்ப்பத்தை வழங்கும் என, அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

ஜனாதிபதியின் கட்சி - மக்கள் விடுதலை முன்னணியுடன் இன்னமும் "கூட்டு" ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள முயற்சித்து வருகிறது. இந்த "கூட்டு" ஏதோ ஒருவகையில் சாத்தியமாகும் வேளையில், ஜனாதிபதி நடாளுமன்றத்தைக் கலைக்கும் வாய்ப்பு இருப்பதாகவே கருதப்படுகிறது.

அண்மைகாலங்களில் எடுக்கப்பட்ட மக்கள் கருத்து கணிப்புகள் யாவும், அரசாங்கம் முன்னெடுததுள்ள சமாதான முன்னெடுப்பின ஏற்பாட்டாளரான நோர்வேத் தரப்புக்கு எதிரானதாகவே இருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளன. இனப்பிரச்சினைத் தீர்வுக்குப் பேச்சுவார்த்தைகளே சரியான மார்க்கமென மக்கள் கருத்துக கணிப்பு கூறுகின்றபோதும், அதனை எய்தும் அரசாங்கத்தின் முன்னெடுப்பு அதிருப்தியைக் காட்டிநிற்கின்றன.

எனவே, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க - ஆட்சி மாற்றம் ஒன்றுக்கான வாய்ப்புகள் குறித்து, தமது கட்சித் தரப்புடன் தீவிரமாக ஆலோசித்து வருகிறார்.

மக்கள் மத்தியில் - அரசாங்கத்துக்கு எதிராக வளர்ந்து வரும் அதிருப்திநிலையைப் பயன்படுத்தி, தமது ஆட்சியை நிறுவலாம் என, ஜனாதிபதி எண்ணம் கொண்டுள்ளார்.

இதனடிப்படையிலேயே, அவர் மக்கள் சந்திப்புக்களிலும், பொதுக் கூட்டங்களிலும் பங்கேற்று வருகிறார்.

ஆனால், இனப்பிரச்சினைத் தீர்வுக்குத் தாம் என்ன தீர்வை வழங்கவிருக்கிறார் என்பதை அவர் தெரிவிக்கவில்லை. இடைக்கால நிர்வாகம் தொடர்பாக, அவர் பேசி வருகின்றபோதும், அதிலும் அவரின் நிலைப்பாடு வெளியிடப்படவில்லை.

---

## மிருகங்கள் மூலம் பரவும் நோய்கள்

பகுதி 12

### தோல் துளைப்பான் அல்லது தோல் உழுவான் நோய்

**(Cutaneus Larva migrans)**

தோல் உழுவான்கள் என அழைக்கப்படும் அன்சிலோஸ்ரோமா பிரேசிலியென்செஸ் அன்சிலேஸ்ரோமா கானியம் ஆகிய கொழுக்கிப் புழுக்கள் நாய்களில் வாழும் புழுக்களாகும். இவற்றின் முட்டைகள் நாயின் மலத்துடன் வெளியேற்றப்படும். இவை மண்ணில் பொரித்துப் புழுக்களாகி, வேறு நாய்களில் தொற்றித் தமது வாழ்க்கை வட்டத்தைப் பூர்த்தி செய்வதற்காக மண்ணில் காத்திருக்கும். நாயின் பாதத்தைப்போல, மென்மையான தோலினாலான மனிதவுடலின் பகுதிகள், இவற்றுடன் தொடுகையுறும்போது, அப்பகுதிகளை நாயின் பாதங்கள் என எண்ணி இவை மனிதனின் உடலில் தொற்றிக் கொள்ளும். இவை மனிதனின் மென்மையான தோல் பகுதிகளைத் துளைத்து உள்ளே நுழையும் வேளையிலேயே, நாய் அல்லாததும், தனது வாழ்க்கை வட்டத்தைப் பூர்த்தி செய்ய முடியாததுமான வேறு ஒரு விலங்கில் தொற்றி விட்டதை உணரும். திக்குத் தெரியாத காட்டினுள் வேட்டைக்குச் சென்றவர், போகுமிடமும் தெரியாமல், திரும்பிவர வழியும் தெரியாமல் அலைந்து திரிவதுபோலதான் தொற்றிய மனிதரின் உடலின் தோலின் கீழ்ப்புறத்தை உழுதுகொண்டு அங்கும், இங்கும் திரியும். இரவு பகலாகத் திரியும். ஒருவரது உடலில் ஒரே வேளையில் இத்தகைய பல புழுக்கள் தொற்றுவதுண்டு. ஒவ்வொன்றும் ஒவ்வொரு திசையில் தோலை உழுது கொண்டு திரிவதால், நோய்த் தொற்றுக்கு ஆளான மனிதர், நரக வேதனை அனுபவிப்பர். அவரது உடலில் இவை செல்லுமிடமெல்லாம் சொறிவு, எரிவு என்பன ஏற்படும். தொற்று ஏற்பட்டவர் அவற்றைத் தாங்கமுடியாது துடிப்பார். சொறிந்து, சொறிந்து தோலைச் சேதப்படுத்துவதால், வேறு கிருமிகளும் உட்புகுந்து, சீழ்க் கொப்புளங்கள் ஏற்படவும் வாய்ப்பு உண்டு.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் ஏற்பட்ட கட்டுப்பாடற்ற நாய் வளர்ப்பு முறைகளால் இந்த அவலம் ஏற்படுகிறது. அடியார்கள், அங்கப்பிரதிஷ்டை செய்து வழிபாடாற்றுகின்ற சைவ ஆலயங்களின் வீதிகளில், நாய்கள் மலங்கழிப்பதால், இப்புழுமுட்டைகள் ஆலய வீதிகளில் பரம்புகின்றன.

ச.ஆ.கோபாலமூர்த்தி

(தொடரும்.....)

# நேற்றைய பேராளர் எழுச்சி மாநாட்டிலிருந்து....


தேசியக் கொடிக்கு மலர் வணக்கம் செலுத்தும் கேணல் தீபன்



அகவணக்கம் செலுத்தும் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள்


தமிழ்ச்செல்வனுடன் பொதுமக்கள்.



பேராளர் மாநாட்டில் பிரமுகர்கள்.



தளபதிகள் கேணல் துர்க்கா, கேணல் விதுஷா


புலிகளின் அரசியற்துறை பிரமுகர்கள்.



பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள்.





நேற்று பளையில் இடம்பெற்ற பேராளர் எழுச்சி மாநாட்டில் கலந்துகொண்ட பொதுமக்கள்.


சி.இளம்பரிதி


சி.வீ.கே.சிவஞானம்


சகாயசீலன்


சு.கணேசலிங்கம்


ச.தனபாலசிங்கம்



சூ.சிறில்



தமிழ்விழி


க.சூரியகுமார்


மனோகரக் குருக்கள்


டேவிட் அடிகளார்


பொ.கமலநாதன்


சிதம்பரநாதன்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# வேம்படி கலைப்பிரிவு மாணவி மாவட்ட மட்டத்தில் முதலிடம்!



நேற்று முன்தினம் வெளியான க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளில், கலைப்பிரிவில் யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவி தர்மினி அரசநாயகம் மூன்று பாடங்களிலும் 'ஏ' சித்திபெற்று, யாழ்.மாவட்டத்தில் முதலிடத்தையும், தேசியரீதியில் 51 ஆவது இடத்தையும் பெற்றார். இதேவேளை - யாழ். மாவட்டப் பாடசாலை களின் பரீட்சை பெறுபேறுகள் நேற்றிரவு யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்பட்டன. இவை பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பட்டதாக தெரியவருகிறது.

## பாதுகாப்பு....

நடவடிக்கையில் தம்முயிரை இழந்த மக்களுக்கு அஞ்சலியை செலுத்துகின்றேன். இனிவரும் காலங்களில் இதுபோன்ற துயரச் சம்பவங்கள் நடைபெறக்கூடாது.

பிரதமர் ரணில் அரசு தற்போது, நாட்டில் நிரந்தரமான சமாதானம் ஏற்படுவதற்கு பல முயற்சிகளைச் செய்து வருகின்றது. உயர்பாதுகாப்பு வலயம் பற்றி நான் உன்னிப்பாக கவனித்துள்ளேன். இதுபற்றி உங்கள் கருத்துக்களைப் பிரதமருக்கு நான், எடுத்துக்கூறவுள்ளேன். மிக விரைவில இப்பிரச்சினை தீர்வுக்கான ஓர் நல்வழி உருவாகும். கிறிஸ்தவ விவகார அலுவல்கள் அமைச்சர் என்ற ரீதியில், இந்த ஆலயத்திற்கு நிதி ஒதுக்கீட்டினைச் செய்யவுள்ளேன். நிறைவேற்றமுடியாத வாக்குறுதியை நான் உங்களுக்கு அளிக்க விரும்பவில்லை என்றும் தெரிவித்தார். இந்நிகழ்வில், இந்து கலாசார அமைச்சர் மகேஸ்வரன், பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா, அரச அதிபர் பத்மநாதன், யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் மற்றும் பல அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

## இலங்கைப்...

சில மாற்றங்களுக்கு வழிவகுத்துள்ளதாக அறியப்படுகின்றது.

ஆரம்பத்தில் - சமாதானப் பேச்சுவார்த்தையில் உதவிபுரிய வந்திருந்தும், ஆழமான ஈடுபாட்டை- இந்தியா கொண்டிருக்கவில்லை.

வெள்ளியன்று நடந்த சந்திப்பில்- பிராந்திய ஒற்றுமைக்கு, பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்ற கருத்தும், இரு நாடுகளின் அரசியல் ஸ்திரத்தன்மைக்கு - பேச்சுவார்த்தை அவசியம் என்ற கருத்தும்,

இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிடுவதற்கான எண்ணத்தை வெளிப்படுத்துவதாகவுள்ளதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

## புலிகள் தரப்பு....

இதேவேளை - புலிகள் பேச்சுக்களை நடத்துவதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு, மேலும் பல ஐரோப்பிய நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளதாகவும்,

இவற்றுள் டென்மார்க், இத்தாலி போன்ற நாடுகளும் இடம்பெற்றுள்ளதாகவும் தெரியவருகிறது.

## அரசின் யோசனைகளுக்குப்...

இவற்றை சிங்கள தேசம் யதார்த்தமாக புரிந்துகொண்டு, ஆத்மார்த்த ரீதியாகப் பிரச்சினையைத் தீர்க்க முன்வரவேண்டும். மீண்டும் ஏமாற்ற முற்பட்டால் அதன் விளைவுகளைச் சிங்கள தேசம் சந்திக்கநேரிடும். இந்த யுத்த நிறுத்தத்தால் பல உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. அது எங்களுக்கு மனநிறைவைத் தருகின்றது.

நாங்கள் இன்று பல விட்டுக் கொடுப்புக்களைச் செய்துள்ளோம். பொறுமையைக் கடைப்பிடித்து வருகின்றோம். இவற்றை, சர்வதேச சமூகம் பார்த்துக் கொண்டு இருக்கின்றது. நாம் இழந்துவிட்ட எமது உரிமைகளைப் பெறுவதற்காகவே இதனைச் செய்கிறோம்.

நாம் ஏமாற்றப்பட்டு, எமது இனம் மீண்டும் அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்லப்படுவதைப் பார்த்துக்கொண்டு, எம்மால் பொறுமையாக இருக்க முடியாது.

தமிழீழ தேசிய விடுதலைக்காக, தேசியத் தலைவரின் எதிர்பார்ப்பின் ஒரு வெளிப்பாடான வெகுசன அமைப்பே - தேசிய எழுச்சிப்பேரவை ஆகும்.

யாழ். மாவட்டத்தில் - இராணுவக கட்டுப்பாட்டில் உள்ள எம்மக்கள், தலைவனின் வழியில் இன்று ஒன்று திரண்டிருப்பதைக் கண்டு, நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

இன்று, தமிழ் இனம் மிக முக்கியமான திருப்புமுனைக் காலகட்டத்தில் உள்ளது. இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் - எமது தலைவர்கள் பல போராட்டங்களை அகிம்சை முறையிலும், மென்மையான முறையிலும் நடத்தினார்கள். ஆனால், அவ்வப்போது ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் எல்லாம் கிழித்தெறியப்பட்டன.

இன்று சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன் - நாம் சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம். அதாவது, சர்வதேச சமூகத்தின் அங்கீகாரம்- எமது போராட்டத்தின் விளைவாக, இன்றுதான் கிடைத்துள்ளது.

எமது தலைவரின் தீர்க்கதரிசனத்துடனான மதிநுட்பத்தினால்- புதிய பாதை, புதிய நிலை காரணமாக இந்தச் சமாதானச் சூழல் யதார்த்தமாக உருவாக்கப்பட்டது.

காலத்திற்கு காலம், இன அழிப்பு தமிழ்த் தேசத்தில் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், நாம் இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றோம். உலக அரங்கில் சமத்துவமாக, உங்கள் பிரதிநிதிகளாக, தமிழ்மக்களின் விடுதலையைப் பெற்றுக்கொள்ள வழி ஏற்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டு மக்களை இன்று சந்திக்கின்றபோது, இலட்சக் கணக்கான மக்களைக் காணுகின்ற உணர்வு ஏற்படுகின்றது.

முன்னர், ஒரு பொது எதிரிக்கு முகங்கொடுத்துப் போராடினோம். ஆனால், இன்று சமாதானச் சூழ்நிலையில், பல எதிரிகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. போர் அரக்கனை எல்லா மக்களும் சேர்ந்து அழிக்க வேண்டும். இன்றைய புதிய சூழலை, சிங்களதேசம் புரிந்துகொள்ளவேண்டும்.

கடந்த காலங்களில் - யுத்தத்தின் மூலம் சமாதானம் என்ற போர்வையில், சந்திரிகா அரசு தம்மைப் பலப்படுத்துவதற்கும், தமிழினத்துக்கு கொடுமைகளை ஏற்படுத்திய ஒரு காலமாகவும் அமைந்தது.

போராட்ட வரலாற்றிலே, சந்திரிகா அரசின் சமாதானத்திற்கான யுத்தம் என்ற, அந்தக் காலப் பகுதியிலேயே, எமது மக்கள் - பாரிய அழிவுகளையும் சொத்துக்களையும் உயிர்களையும் இழக்க நேரிட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையை அழிக்கும் நோக்குடன்- பாரிய படை நடவடிக்கை குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டது. சர்வதேச அரங்கில் புலிகள் பலவீனப்படுத்தப்பட்டார்கள் என, அரசு பிரசாரம் செய்தது.

இந்த நேரத்தில் - குடாநாட்டு மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறவேண்டிய நிலையை எண்ணி, தேசியத்தலைவரும் நானும், போராளிகளும் மிகவும் வேதனையடைந்தோம்.

ஆனால், எமது தலைவர் - தூரநோக்கோடும் நல்ல சிந்தனையோடும், குடாநாட்டை விட்டு மக்களையும் போராளிகளையும் வெளியேற்றும் முடிவுக்கு வந்தார்.

குடாநாட்டை விட்டு, மக்களும் போராளிகளும் வெளியேறிய போது - சர்வதேச அரங்கில், புலிகள் பலவீனப்படுத்தப்பட்டுள்ளனர் என அரசு காட்டியது. ஆனால், முல்லைத்தீவு இராணுவ முகாம் புலிகளால் தகர்த்தெறியப்பட்டபோது, உலகம் அதிசயித்து நின்றது. சிங்கள அரசு தடுமாறியது.

அன்றைய அரசு - முழு வன்னிப் பகுதிகளையும், தனது கட்டுப்பாட்டில் கொண்டுவரவேண்டும் என்ற நிலையில், ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது. இந்தப் படை நடவடிக்கையெல்லாம் ஓயாத அலைகள் 1,2,3 நடவடிக்கைகளால் முறியடிக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து - ஆனையிறவுப் பெருந்தளம், எமது ஈழப் படைகளால் கைப்பற்றப்பட்டது. கட்டுநாயக்க விமானத்தளம் புலிகளால் அழிக்கப்பட்டது. இதன்மூலம்- அரசு தனது பொருளாதாரபலத்தை இழந்து, திண்டாடியது. இதன்மூலம், சிங்கள தேசம் ஒரு முடிவுக்கு வந்தது. இராணுவ ரீதியாக வெல்லமுடியாத தமிழர்களுடன், சமரசம் செய்யவேண்டும் என்ற ஒரு நிலைக்கு - சிங்கள அரசு தள்ளப்பட்டது.

நாங்கள் பலத்தோடு நிற்கின்ற படியால்தான், சர்வதேச சமூகம் - எம்பக்கம் நிற்கின்றது. நாங்கள் ஒன்றுபட்டு எமது உரிமைகளுக்காகப் போராடவேண்டும். எமது பக்கத்திலிருக்கும் நியாயம் காரணமாக, சர்வதேச சமூகம் எம் பக்கம் நிற்கின்றது.

யுத்தம் இல்லாது இருக்கின்ற இந்த இடைக்காலத்திலே - மக்களின் இயல்புநிலை மேம்படவேண்டும். அதற்காகவே, இடைக்கால நிர்வாகத்தினை நாம் கேட்கின்றோம்.

அரசு அனுப்பிவைத்துள்ள மூன்றாவது திட்டவரைபிலும் பல குறைபாடுகள் உள்ளன. ஆனால், அதை நாம் நிராகரிக்கவில்லை. அப்படி நிராகரித்தால் - சர்வதேச சமூகம் எம்மைக் குறைகூறும். எங்கள் மக்களின் தேவைகள் உள்ளடங்கிய ஒரு வரைபை, நாம் விரைவில் அரசுக்கு அனுப்பவுள்ளோம்.

நாம் எந்த அழுத்தங்களுக்கும் அடிபணியமாட்டோம். இலட்சியப்பற்றுடைய தலைவரின் வழியில் நாம் ஒன்றுதிரள்வோம் என்று தமிழ்ச்செல்வன் தனது உரையில் மேலும் தெரிவித்தார். (ச,09,122,115,13)

நீங்கா நினைவில் மூன்றாம் ஆண்டு
அமரர்
தம்பிப்பிள்ளை சிவஞானசுந்தரம்
(இளைப்பாறிய உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)

தோற்றம் 26.06.1941
மறைவு 14.08.2000
ஆண்டுகள் மூன்று ஓடிமறைந்தாலும்
ஆறாது எம் துயரம்
ஓங்கிய நீள் நெடு நினைவாய்
உங்கள் நினைவுகள் நாளும் எம்முடன்....!
பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி.
குடும்பத்தினர்.

## பல்லாயிரம் மக்கள்...

வாழ்த்துரையை சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் தலைவர் மனோகரக்குருக்கள், யாழ். பல்கலைக்கழக அரச அறிவியற்துறை விரிவுரையாளர் சகாயசீலன், யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த டேவிட் அடிகளார் ஆகியோர் வழங்கினர். தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சிறப்புரை ஆற்றினார்.

தொடர்ந்து, யாழ். மாவட்ட மக்கள், இராணுவத்தினரால் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அரசியல் பிரச்சினைகள் தொடர்பான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டு - தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீவகக் கோட்ட, தேசிய எழுச்சிப் பேரவையினரால், கடல் சூழ் நெருக்கடியும் ஏற்படும் பாதிப்புக்களும், என்ற விடயம் தொடர்பாக பேரவையின் துணைச் செயலாளர் சு.கணேசலிங்கத்தினால் முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன.

வடமராட்சிக் கோட்ட தேசிய எழுசசிப் பேராளர் சார்பில் 'கடல் தொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகள்' தொடர்பாக, பேரவையைச் சேர்ந்த க.சூரியகுமார் முன்மொழிவுகளை முன்வைத்தார்.

'தென்மராட்சியில் இராணுவ நெருககுவாரமும் மீள்குடியேற்ற நெருக்கடியும்' என்ற விடயம் தொடர்பாக மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் துணைச் செயலாளர் க.சந்திரசேகரம் முன்மொழிகளை முன்வைத்தார்.

வலிகாமம் கோட்டத்தினர், இயல்பு வாழ்க்கையும் மீள்குடியமர்வும் உயர் பாதுகாப்பு விடயமும் அதன் பாதிப்பும், என்ற விடயம் தொடர்பாக முன்மொழிவு முன்வைக்கப்பட்டது.

'இடைக்கால நிர்வாக அரசு - உடன் விடுதலைப் புலிகளிடம் வழங்கவேண்டும்' என்ற விடயம் தொடர்பாக, யாழ். நல்லூர் கோட்டத்தின் செயலாளர் சீ.வி.கே.சிவஞானம் முன்மொழிவுகளை முன்மொழிந்தார்.

'யாழ்.மாவட்ட கல்விச் சமூகத்தினா சமூக மேம்பாட்டை விருத்தி செய்தலும் சமூகச் சீரழிவுகளை கட்டுப்படுத்தல்' என்ற விடயம் தொடர்பாக யாழ். மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவையின் செயலாளர் பொ. கமலநாதன், யாழ். பல்கலைக்கழக நாடக அரங்கத் துறையைச் சேர்ந்த சிதம்பரநாதன் ஆகியோர் முன்மொழிவுகளை முன்மொழிந்தனர்.

வடமாகாண அதிபர் சங்கத்தின் பிரசாரச் செயலாளர் அகிலதாஸ் - 'கல்வி தொடர்பான பிரச்சினைகளும் அதற்கான தீர்வுகளும்' என்ற விடயம் தொடர்பாக முன்மொழிவுகளை முன்வைத்தார்.

இந்த நிகழ்வில் நீதி - நிர்வாகப் பொறுப்பாளர் பரா, விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், கேணல் தீபன், மாலதி படையணியின் தளபதி கேணல் விதுஷா, சோதியா படையணியின் தளபதி கேணல் துர்க்கா உட்பட கல்வியாளர்கள், போராளிகள், பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

யாழ்.மாவட்ட அரசியற்துறைப் துணைப் பொறுப்பாளர் செம்மணன் நிறைவுரையாற்றினார். (122.115.09)

## யாழ்.செயலகத்தில்....

அதிகாரிகளையும் ஏனையோரையும் சந்தித்து கலந்துரையாடலொன்றினை நடத்தத் திட்டமிட்டிருந்தார்.

ஆனால், காணாமற்போனோர் சங்கம் மற்றும் உயர்பாதுகாப்பு வலயப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வாழும் பொதுமக்களும், யாழ். செயலகத்தின் வாயிலைமறித்து திடீரென மறியற்போராட்டமொன்றில் ஈடுபட்டனர்.

இதனால், அமைச்சர் உட்பட அக்குழுவினர் யாழ். செயலகத்துக்கு வராமலேயே சென்றனர். இச் சம்பவத்தையடுத்து அவ்விடத்துக்கு விரைந்த தமிழ் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் அவ்விடத்திற்கு உடன் விரைந்து மக்களின் பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்து அதற்குரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

ஆனால், போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தமிழ் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய- நீங்கள் எமக்காக நாடாளுமன்ற கூட்டத்தை ஓர்நாள் பகிஷ்கரிப்பீர்களா? எனக் கேள்வியெழுப்பினார்கள். நீங்கள் எமக்கொரு நல்ல தீர்வினை தந்தால்தான், நாம் எமது போராட்டத்தை கைவிடுவோம் இல்லாவிட்டால், இது போன்று எமது போராட்டங்கள் தொடந்து கொண்டிருக்கும் எனத் தெரிவித்தனர்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 11.08.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.